REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 338 ஐப்பசி 18 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 03 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## அமெரிக்கா ஜனாதிபதி தேர்தல் இன்று




08

# கிளிநொச்சிக்கும் பரவியது கொரோனா



### கொழும்பிலிருந்து வந்த கண்டாவளை நபருக்கு தொற்று

கிளிநொச்சி, நவம்பர் 3

கொழும்பில் உணவகம் ஒன்றில் பணியாற்றி, வீட்டுக்குத் திரும்பிய கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் மூன்றாம் யுனிட்டில் வசிக்கும் ஆண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 19

முச்சந்தி முரளி

"கிளிநொச்சி மட்டும் தான் மிச்சமாயிருந் திச்சு. இப்ப அதுவும் கொரோனாவிட்ட சரண்டர் ஆகிட்டு பாருங்கோ..."



## கொரோனா 22ஆவது சாவை பதிவிலிருந்து நீக்கியது அரசு

கொழும்பு, நவ. 3

பாணந்துறைப் பகுதியில் இளைஞன் உயிர் மாய்த்திருந்ததை கொரோனா வைரஸ் 19

## சகல மாவட்டங்களிலும் கொரோனா

### எச்சரிக்கிறது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, நவ. 3

நாட்டின் சகல மாவட்டங்களிலும் கொரோனாக் கொத்தணிகள் ஏற்படுவதற்கான ஏதுநிலைமை ஏற்பட்டுள்ளது. இது மிகப் பெரும் ஆபத்தானது 19

## வடக்கில் தொற்றாளர் 60

யாழ்ப்பாணம், நவ. 3

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று ஆரம்பித்த மார்ச் மாதத்தில் இருந்து நேற்று 19

## 'கொரோனா' நேற்றும் 275

கொழும்பு, நவ. 3

இலங்கையில் நேற்று 275 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என்று 08

## புதுக்குடியிருப்பு யுவதிக்கு தொற்றில்லை

முல்லைத்தீவு, நவ. 3

முல்லைத்தீவைச் சேர்ந்த கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புடைய 56 பேருக்கு மேற்கொள் 08

## ஊருக்கு மட்டும் உபதேசம்!!!

### யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் செயற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 3

கொரோனா பரவல் உக்கிரமடைந்து வரும் நிலையில் பொதுக் கூட்டங்கள், ஒன்றுகூடல்களை நிறுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவித்த யாழ்ப்பாண மாவட்டச் செயலரே, முன்னாயத்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் 19

## கிளிநொச்சி தொற்றாளர் 3 பேருந்துகளில் பயணம்

கிளிநொச்சி, நவ. 3

கிளிநொச்சியில் நேற்றுக் கண்டறியப்பட்ட தொற்றாளர் மூன்று பேருந்துகளில் பயணித்தே அவரது வீட்டை வந்தடைந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு -வவுனியா இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந் 19

## எம்.பியாகின்றார் பஸில் ராஜபக்ச!

### அமைச்சுப் பதவியும் தயார்

கொழும்பு, நவ. 3

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 08

## பாடசாலை விடுமுறை 2 வாரங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, நவ. 3

அரச பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறை மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

மூன்றாம் தவணைக்காக பாடசாலைகளை எதிர்வ 19

## 'தண்ணி காட்டும்' 6 பேர்

### தொற்றாளர்களுடன் பயணித்தோரை தேடும் பணி தொடர்கின்றது

யாழ்ப்பாணம், நவ. 3

நல்லூர், வேலணை மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்த தொற்றாளர்களுடன் பேருந்தில் ஒன்றாகப் பயணித்தவர்களில் 6பேரைத் தேடும் பணி நேற்று மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்ட போதும் அவர்களைக் கண்டறிய முடியவில்லை என்று வடக்குமாகாண 08

## யாழ்ப்பாணம் வரும் அமைச்சர்கள் தனிமைப்படுத்தப்படுவார்களா?

### அதிகாரிகள் அச்சத்தில்!

யாழ்ப்பாணம், நவ. 3

மேல் மாகாணத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் அனைவரும் 14 19

## பொதுவெளியில் நடமாடாதீர்கள்!

### வடக்கு ஆளுநர் விசேட அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

பொதுமக்கள் பொதுவெளியில் நடமாடுவதை இயன்றளவில் தவிர்க்கவும். அத்துடன் முகக்கவசம் அணிதல், கைகள் சுத்திகரிப்பு திரவத்தை பயன்படுத்தல், தனியாள் இடைவெளிகளைப் 19

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

## சுற்றுலா விடுதிகளுக்கு பூட்டு

கொழும்பு, நவ.3

வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து சுற்றுலா விடுதிகள் மற்றும் முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

இவை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் உள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பொலிஸ் அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை

கொழும்பு, நவ.3

வெலிபன்ன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா பரவலைத் தடுப்பதற்காக விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய அவர் செயற்படவில்லை என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு களுக்கு அமையவே இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்காமை, அவர்கள் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்யாமை போன்ற குற்றச்சாட்டுக்கள் பொலிஸ் பொறுப்பதிகாரி மீது சுமத்தப்பட்டுள்ளன. (எ-இ)

## இந்தியத் தூதரக பணியாளருக்கு கொரோனா!

கொழும்பு, நவ.3

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகப் பணியாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### யாழ். பல்கலை பரீட்சைப் பெறுபேறுகள்:

# உரிய காலத்தில் வெளியாவதற்காக இறுக்கமான நடைமுறை அறிமுகம்

### பேரவைக் கூட்டத்தில் துணைவேந்தர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ. 3**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவருவதை உறுதிப்படுத்தும் வகையிலான புதிய நடைமுறையை துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா அறிமுகப்படுத்தியுள்ளார்.**

பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவராமை, பட்டமளிப்பு விழா காலதாமதடைதல் மற்றும் மாணவர்கள் தொழில்வாய்ப்புக்களை பெறமுடியாமல் சிரமங்களை எதிர்நோக்குதல் என்பன தொடர்பாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கை மூலம் அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, இந்தப் புதிய இறுக்கமான நடைமுறையை பேரவைக் கூட்டத்திலேயே பீடாதிபதிகளுக்கு அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படும் நேரத்திலேயே, வினாத்தாள்களை மதிப்பீடு செய்தல், இரண்டாம் மதிப்பீடு, துறைத்தலைவரின் அனுமதி, பீடாதிபதியின் அனுமதி, பரீட்சைக் கிளையிடம் பெறுபேறுகள் ஒப்படைக்கப்படுதல் ஆகியவற்றுக்கான திகதிகளையும் நிர்ணயிக்குமாறு துணைவேந்தர் அறிவுறுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படி இரண்டு மாத காலப்பகுதிக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதை உறுதிப்படுத்தும் வகையில் இவை அனைத்தும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு பீடாதிபதிகளைப் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் மதிப்பீடு செய்து முடிக்கப்படாத விடைத்தாள்களை உரிய விரிவுரையாளரிடமிருந்து மீளப்பெற்று, பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயோ அல்லாது போனால் வேறு பல்கலைக்கழகங்களின் துறைசார்ந்த பொருத்தமான வேறு விரிவுரையாளர்கள் மூலமாகவோ விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை உரிய காலத்துக்குள் நிறைவுசெய்ய ஏற்பாடு செய்யுமாறும் துணைவேந்தர் பணித்துள்ளார்.

உரிய காலப்பகுதிக்குள் விடைத்தாள் திருத்தும் பணிகளை நிறைவுசெய்யாத விரிவுரையாளர்களுக்கு அதற்குரிய கொடுப்பனவுகளை இரத்துச் செய்வதுடன், தண்டப்பணம் அறவிடும் பொறிமுறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா கண்டிப்பாக பீடாதிபதிகளுக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலாதிகாலமாக பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலப்பகுதிக்குள் வெளிவராமை குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக பல தரப்புக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் இந்தப் புதிய நடைமுறை மூலம் எதிர்காலத்தில் இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ.5)

## சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டும்

*ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தல்*

கொழும்பு, நவ. 3

சுகாதார அமைச்சரும் அரசும் தோல்வியுற்றமை தற்போது தெளிவாகியுள்ளது.

ஆதலால், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பதவியில் இருந்து விலகவேண்டும் என்று வலியுறுத்தியது ஐக்கிய மக்கள் சக்தி.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்ரோபர் 4ஆம் திகதி மினுவாங்கொடவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியருக்குக் கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டதை அடுத்து அரசு தீவிரமாகச் செயற்பட்டிருந்தால் இன்று இந்த நிலைமையைத் தவிர்த்திருக்க முடியும். இருப்பினும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு அரசு முன்னுரிமை வழங்கி ஒக்ரோபர் 22ஆம் திகதி வரை நாட்டை முடக்காமல் இருந்தது. தனது சுயநலத்துக்காக அரசு நாட்டை பேரழிவில் தள்ளியுள்ளது - என்றார். (ம-இ)

## நடமாடும் வியாபாரத்துக்கு இனித் தடை

கொடிகாமம், நவ.3

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் பொதுச் சந்தையில் திறந்த சந்தைகள் இயங்கும். அதேவேளை நடமாடும் அங்காடி வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளது என்று சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் நிரந்தர வர்த்தக நிலையங்கள், மரக்கறி, தேங்காய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் இயங்கும். நடமாடும் அங்காடி வியாபார விற்பனை இன்று (நேற்று) முதல் நிறுத்தப்பட்டுள்ளன என்றார். (எ-159)

## மாமியார் அடித்துக் கொலை; மருமகள் சந்தேகத்தில் கைது

கொழும்பு, நவ.3

தாக்குதலுக்கு இலக்கான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது கணவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பெண்ணின் மருமகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெஸ்போட் தோட்டத்தில் நடந்துள்ளது. மாரிமுத்து கோவிந்தம்மா (வயது 80) என்ற 4 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார். இவரது கணவர் அங்கமுத்துமாரிமுத்து (வயது85), வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூன்று பிள்ளைகளின் தாயான மருமகள் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு பின்னர் கைக்கலப்பாக மாறியது என்றும், அதில் மருமகள், மாமி மற்றும் மாமனை சரமாரியாகத் தாக்கினார் என்றும் முதற்கட்ட விசாரணைகளின்படி தெரிய வந்துள்ளது.

பிரதான வீதியில் பலத்த காயங்களுடன் விழுந்து கிடந்த பெண்ணையும், மலசலகூடத்தில் காயங்களுடன் காணப்பட்ட அவரின் கணவரையும் பிரதேச வாசிகள் நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர். எனினும் சிகிச்சை பயனின்றி மாமியார் உயிரிழந்துள்ளார். அதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள மருமகள், இனந்தெரியாதவர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட 10பேர் அதிரடிக் கைது

கொழும்பு, நவ. 3

சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அகுணகொலபெலெஸ்ஸ பகுதியில் வைத்து நேற்றிரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட சிறப்புச் சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 45 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் சூரியவெள, அகுணகொலபெலெஸ்ஸ மற்றும் அம்பலாந்தொட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## சங்கிலிக் கொள்ளையர் பொலிஸாரிடம் சிக்கினர்

கிளிநொச்சி, நவ.3
முகவரி கேட்பது போன்று பாசாங்கு செய்து, பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையடித்து தப்பித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் உள்ள பெண் ஒருவரிடமே குறித்த கொள்ளையர்கள் நேற்றுமுன்தினம் காலை தங்கச் சங்கிலியைக் கொள்ளையடித்துள்ளனர். சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அன்றைதினமே கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் வைத்து அவர்கள் இருவரையும் கைதுசெய்தனர். (ப-113)

## மதுக்கடைகளால்தான் இன்னொரு கொத்தணி

### உடன் மூடும்படி கோரிக்கை

கொழும்பு, நவ. 3
நாட்டில் இன்னொரு கொரோனா கொத்தணி உருவாகும் என்றால் அது மதுபான நிலையங்களால்தான் என்று தெரிவித்துள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

இது தொடர்பில் அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில், நாட்டில் இன்னொரு கொத்தணி உருவாகும் என்றால் அது மதுபானசாலைகளிலேயே உருவாகும். எனவே நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபானசாலைகளையும் உடனயாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே நாட்டில் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகள் காணப்படுகின்றன.


இந்த நிலையில் மதுக்கடைகளை இவ்வாறு திறந்தி ருக்க அனுமதித்திருப்பது பெரும் ஆபத்தான நிலையைத்தான் உருவாக்கும் என்றார். (ம-இ)

## சுய தனிமையில் 67,000 பேர்

கொழும்பு, நவ.3
நாட்டில் பரவிக் கொண்டிருக்கும் கொரோனாத் தொற்றுக் காரணமாக, தற்போது 67,000 பேர் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதில், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 25,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)




## 5 இலட்சத்தை தாண்டியது பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, நவ.3
இலங்கையில் இதுவரை 5 இலட்சத்து 24 ஆயிரத்துக்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 24ஆயிரத்து 448 ஆக உள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## எஸ்.டி.எவ் உட்பட 2,000 பொலிஸார் சுயதனிமையில்!

**■ 135 பேருக்கு தொற்று ■ 3 முகாம்கள் முடக்கம்**



**கொழும்பு, நவ. 3**
**விசேட அதிரடிப்படையினர் உட்பட 2 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'2ஆவது கொரோனா அலை மூலம் இதுவரை 135 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. சுமார் 300 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிப்பில் உள்ளனர். அத்துடன், சிறப்பு அதிரடிப்படையினர் உட்பட 2 ஆயிரம் பேர் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

களனி, ஈராஜகிரிய மற்றும் களுபோவில ஆகிய விசேட அதிரடிப்படை முகாம்களில் உணவுப் பிரிவுக்கு பொறுப்பாக உள்ளவர்கள், பேலியகொட மீன் சந்தைக்கு சென்றுவந்ததாலேயே அங்கு கொரோனா பரவியது.

இதனையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். முகாம்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ம-44)

## விபத்தில் சிக்கிய முதியவர் சாவு

சாவகச்சேரி, நவ. 03
வைத்தியசாலை விடுதியிலிருந்து இரகசியமாக வெளியேறிய முதியவர், மோட்டார் சைக்கிளில் மோதுண்டு காயமடைந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வரணி இயற்றாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் (வயது 78) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

வலிப்பு ஏற்பட்டதால், ஏற்பட்ட காயம் காரணமாக சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதியவர் கடந்த வாரம் விடுதியிலிருந்து அதிகாலை 4 மணியளவில் எவருக்கும் தெரியாமல் வெளியேறி வீதியைக் கடக்க முற்பட்டார். இதன்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் அவர் மோதுண்டார். இதில் காயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில சுயநினைவின்றி இருந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ப-9)

## தொற்றாளர்கள் வந்த பஸ்ஸில் முல்லை. இளைஞனும் பயணம்

### சுகாதாரப் பிரிவிரினர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, நவ.3
முல்லைத்தீவு, பாலைப்பாணி கிராமத்துக்கு கொழும்பில் இருந்து வந்த இளைஞனுடன் பயணித்த நால்வருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அந்த இளைஞன், மற்றும் அவருடன் தொடர்புபட்டவர்கள் எனப் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கொழும்பில் கஸ்பாவ என்னுமிடத்தில் பணிபுரிந்த மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வன்னிவிளாங்குளம் பாலப்பாணி கிராமத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் கடந்த மாதம் 25ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த சொகுசு பேருந்தில் பயணம் செய்துள்ளார்.

அந்தப் பேருந்தில் பயணம் செய்த நால்வர் கொரோனாத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அந்த இளைஞனுக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர் மல்லாவி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு இதுதொடர்பில் அறிவித்துள்ளார்.

உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இளைஞனுக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. தற்போது அந்த இளைஞன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கிப் பழகியவர்களின் குடும்பங்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப-ரி)

## நாடாளுமன்ற அமர்வை சுருக்கியது கொரோனா

கொழும்பு, நவ. 3
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. கடுமையான சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் 2 மணி நேரமே சபை அமர்வு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் ஒதுக்கப்படாது.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் தவிர வேறு எவரும் நாடாளுமன்ற வளாகத்துக்குள் நுழைவதற்கு இடமளிக்கப்பாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)

# உணவகங்களில் அமர்ந்து உண்பதற்கு இனித் தடை

## யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு



**யாழ்ப்பாணம், நவ.3**
**யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் அமர்ந்து உணவருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட உணவகங்களில் அமர்ந்து உணவருந்துவது மறு அறிவித்தல்வரை தடை செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்த சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும்.
உணவகங்களில் அமர்ந்து உணவருந்த அனுமதிக்க வேண்டாம் என்று உணவக உரிமையாளர்களை வேண்டிக்கொள்கின்றோம்.
வைரஸ் தொற்றில் இருந்து மக்களைக் காக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதை மீறிச் செயற்படும் உணவக உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடையை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் அவதானத்துடனும், பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும்.
இந்த நடவடிக்கைகள் மூலம் மக்கள் கடைகளில் கூடுவதை ஓரளவு குறைக்க முடியும் என்பது எதிர்பார்ப்பாகும். பொதுமக்கள் நலன்கருதி எடுக்கப்படும் முடிவுகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (எ)





## கனரக வாகனம்– வான் வவுனியாவில் விபத்து

வவுனியா, நவ.3
கனரக வாகனமும், வான் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்று வவுனியா கொரவப்பொத்தான வீதியில் இடம்பெற்றது.
திருகோணமலையில் இருந்து கொரவப்பொத்தான வீதிவழியாக யாழ்ப்பாணம் நோக்கி நோயாளி ஒருவரை ஏற்றிவந்த வானின் மீது கோவில்குளம் உமாமகேசுவரன் வீதியால் வந்த கனரக வாகனம் மோதியதில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. விபத்தில் வான் கடும் சேதமடைந்தது. ஒருவர் சிறு காயத்திற்குள்ளானார். விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப)

## சுகாதார நடைமுறையை மீறும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், நவ.3
அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை வர்த்தகர்கள் பின்பற்றாவிட்டால் நகர செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டி ஏற்படும் என்று யாழ்ப்பாணம் மாகர சபை முதல்வர் இ.ஆனால்ட் தெரிவித்துள்ளார்.
நேற்று யாழ்ப்பாண்ம மாநகர சபையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த சிலரால் யாழ்ப்பாணம் நகரக் கடைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பாதகமான முடிவுகள் வராவிட்டாலும் கூட, அவர்கள் தற்போதும் சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பில் உள்ளனர்.
அரசு விடுத்துள்ள அறிவுறுத்தல்களை வியாபார நிலையங்களும் சரியான முறையில் பின்பற்ற வேண்டும். வெளிமாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் நிலைமையை ஆராய்ந்து, உரிய தரப்பினருடன் கலந்துரையாடி உத்தியோகத்தர்களுக்கான பஸ் சேவைகளை மடடும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
யாழ்ப்பாணம் நகரப் பாதுகாப்புத் தொடர்பாக வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். என்றார். (எ20)



## தனிநபர் தேவைக்காக நாடு முடங்காதாம்

கொழும்பு, நவ.3
சில தனிநபர்களின் தேவைகளுக்காக நாட்டை முடக்குவதற்கு அரசு தயாராக இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.
நேற்று கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கொரோனாத் தொற்றுத் தொடர்பாக எதிர்க்கட்சி அரசின் மீது குற்றச்சாட்டு முன்வைக்கின்றது.
ஆனால் ஒரு நாட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்குவது என்பது எளிதான ஒரு விடயம் அல்ல. அவசியம் என்று கருதப்பட்டால், ஒரு முக்கிய கட்டத்தில் மட்டுமே நாடு முழுமையாக முடக்கப்படும்.என்றார். (எ-இ)


## சுவாசக்கோளாறு உள்ளோரை மருத்துவமனையில் சேர்க்குக!



கொழும்பு, நவ. 3சுவாசக் கோளாறால் அவதிப்படுபவர்களை மருத்துவமனைகளில் சேர்க்குமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சுவாசக் கோளாறு உள்ள நோயாளர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், நிலைமை மேலும் மோசமடையக்கூடும் என்பதால் அவர்களை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்குமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், சிறப்பு மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
மேலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப் பகுதியில் நோய் அறிகுறிகள் இருக்குமாயின், 0117 966 366 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-இ)

## இ.போ.ச. பணியாளர்கள் சுயதனிமையில்

கொழும்பு, நவ.3
இலங்கை போக்குவரத்துச் சபை பதுளை சாலையைச் சேர்ந்த 8 பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்பில் தொற்றுடன் இனங்காணப்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவருடன் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரி ஒருவர், அதன் முடிவு கிடைக்க முன்னரே பசறையில் உள்ள பணியாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார் என்றும், அங்கிருந்தபோதே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதையடுத்து பதுளை சாலையில் உள்ள 8 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ-இ)



## வைரஸ் எதிர்ப்புக்கு புதிய முகக்கவசம்

கொழும்பு,நவ.3
தேசிய ஆராய்ச்சிக் குழுவால், முதன் முறையாக வைரஸை எதிர்க்கக் கூடிய முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளது.
பேரதெனிய பல்கலைக்கழக பேராசிரியர்கள் குழு இதனைத் தயாரித்துள்ளது.
இந்த முகக்கவசம் சுமார் இருபது முறை பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதம் வரையில் சலவை செய்யாமல் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு, இந்த விசேட முகக்கவசம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மந்திரித்த தண்ணீரும் கொரோனாவும்

நேற்றோடு கொரோனா கிளிநொச்சியிலும் வெற்றிகரமாகக் கால்பதித்துவிட்டது. இப்போது இலங்கையில் கொரோனா இல்லாத மாவட்டமே இல்லை. எல்லாமாவட்டங்களிலும் தன்கிளைகளைத் திறந்து கொரோனா தன்பாட்டில், எந்தத் தடையுமில்லாமல் எவ்வளவு வேகமாகப் பரவமுடியுமோ அவ்வளவு வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலைகளின் போதெல்லாம் அதன் நதிமூலம், ரிஷிமூலத்தை சுலபமாகக் கண்டுபிடிக்க முடிந்தது. அதனால் தொற்றாளர்களுடன் தொடர்புடைய அனைவரும் கொத்தாக தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டு, அதனைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. பல முனைகளில் கொரோனா தன்னுடைய தாக்குதல் முனைகளைத் திறந்துள்ளதால் யார் அதன் மூலத்தொற்றாளர் என்பதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. அத்தோடு இப்போது கண்டுபிடிக்கப்படும் தொற்றாளர்களில் ஒருவரோடு ஒருவர் எவ்வித இடையீட்டுத் தொடர்பு இல்லாதவர்களும் உள்ளனர். தொற்றாளர்களில் இனம்காணப்பட்ட கொரோனா வைரஸின் வகைகளும் வெவ்வேறானவையாக உள்ளன. இந்திய, ஐரோப்பிய வகையான இருவேறு வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனவேதான், இலங்கையில் அரசின் அத்தனை கட்டுப்பாடுகளையும் உடைத்துக் கொண்டு கொரோனா தன்னிஷ்டப்படி ஆட்டம் போடத் தொடங்கியுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் கைமீறிப் போய்க்கொண்டிருந்தால், ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் என்ன செய்யவேண்டும்? ஏனைய நாடுகளுடன் கூட்டிணைந்து, அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுப்பதனுடன், சுகாதார வசதிகளையும் பெருக்க வேண்டும். ஆனால் இலங்கை அரசோ, உலகில் எந்த அரசும் செய்யாத கொரோனாச் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதுதான் மந்திரித்த தண்ணீர். விகாரைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீர் நிரம்பிய குடங்களை ஆற்றில் வீசுவதன் மூலம் கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இப்படி 'அதிபுத்திசாலித்தனமான' விஞ்ஞான மூளையோடு முன்னின்று செயற்பட்டவர் வேருயாருமல்லர், சாட்சாத் இலங்கையின் சுகாதார அமைச்சரான பவித்திரா வன்னியாராச்சியேதான்.

சுகாதார, விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பெருக்கி, கொரோனாவுக்கு தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து, அதனைக் கட்டுப்படுத்தும் பகுத்தறிவான பணியைச் செய்யவேண்டிய பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவர், ஏதோ பில்லிசூனியக்காரி போன்று, மந்திரித்த தண்ணீரோடும் மண்பானையை ஆற்றில் போட்டுவிட்டால் 'கொரோனா ஒழிந்துவிடும்' என நம்பினால், எந்த லட்சணத்தில் அதனை இலங்கையில் உண்மையாகவே ஒழிக்கமுடியும்?

இப்படித்தான் இந்தியாவில் மோடியின் சொல்லைக் கேட்டு, இரவில் தீப்பந்தம் கொளுத்தி "கோ கொரோனா கோ" என்று இந்தியர்கள் கோஷமிட்டனர். அத்தோடு அங்கு கொரோனா தொலைந்தது என மகிழ்ந்தனர். இந்த மூடநம்பிக்கையின் விளைவாக, அடுத்தடுத்த நாட்களில் இந்தியாவில் தொற்றுவேகம் சூடு பிடித்தது. கொத்துக் கொத்தாகப் பலர் உயிரிழந்தனர். இன்னும் அங்கு கொரோனாவின் சதிராட்டம் நிற்கவேயில்லை.

இந்தியாவை விடவும் மூடநம்பிக்கைகளில் இலங்கை ஒன்றும் சளைத்த நாடில்லை என மந்திரித்த தண்ணீர்ப் பானைகள் மூலம் சுகாதார அமைச்சர் நிரூபித்து விட்டார். இப்படிப்பட்ட அமைச்சர் இலங்கையில் சகலருக்கும் கொரோனா தொற்றிய பின்னரும் கூட, இங்கு சமூகத்தொற்றில்லை என்றுதானே சொல்வார். இப்படிப்பட்ட மாதனமுத்தக்களை நம் ஆட்சியாளர்களாகப் பெற்றமை நம் விதியேயன்றி, வேறென்ன.

# வவுனியா மாவட்டத்தில் 863 பேர் சுயதனிமையில்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, நவ.3

**வவுனியா மாவட்டத்தில் 347 குடும்பங்களைச் சேர்ந்த 863 பேர் சுயதனிமையில் உள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் கொவிட்- 19 தாக்கம் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா வடக்கு நெடுங்கேணி பகுதியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட 14 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இதனையடுத்து அவர்களுடன் வேலை செய்த மற்றும் தொடர்புகளைப் பேணியவர்கள், பிற மாவட்டங்களுக்குச் சென்று வந்தோர் என 347 குடும்பங்களைச் சேர்ந்த 863 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், வவுனியா வடக்கில் 182 குடும்பங்களைச் சேர்ந்த 470 பேரும், செட்டிகுளம் பகுதியில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேரும், வவுனியாவில் 153 குடும்பங்களைச் சேர்ந்த 355 பேரும் இவ்வாறு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ-18)

# தென்மராட்சியில் 9 பேருக்கு பி.சி.ஆர்.

## எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி, நவ.3

தென்மராட்சி பிரதேசத்தில் வீடுகளில் தனிமையில் உள்ள 9 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் எவருக்கும் தொற்றில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றிய ஐந்து பணியாளர்கள், இவர்களை கடந்த மாதம் 22 ஆம் திகதி ஏற்றி வந்த பஸ் சாரதி மற்றும் கொழும்பு முகத்துவாரம் காளி கோவில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு அப் பகுதி முடக்கப்பட்டவதற்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி கெற்பேலிப் பகுதிக்கு வந்த மூவர் ஆகியோர் அவர்களது வீடுகளில் கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. இந்த ஒன்பது பேருக்கும் தொற்று ஏற்படவில்லையென பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ -9)

# உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவிக்கும் கொரோனா



மட்டக்களப்பு, நவ.3

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த மாணவியின் சகோதரன் கொழும்பில் பணிபுரிந்து விட்டு அண்மையிலேயே ஊருக்கு வந்தார் என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த மாணவியுடன் பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# மக்கள் ஆணையை மீறக்கூடாது அரசு

## சஜித் இடித்துரைப்பு

கொழும்பு, நவ. 3

ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை மீறி அரசு செயற்படக்கூடாது. கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு இணையாக, கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அநுராதபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு இணையாக, கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனினும், கடந்த காலங்களில் இந்த இரண்டு செயற்பாடுகளும் சரிசமமாக இடம்பெற்றதைக் காணமுடியவில்லை. இதனால், மக்களே இன்று, தங்களுக்கு உதவுமாறு அரசிடம் கேட்க ஆரம்பித்துள்ளார்கள்.

எனினும், அரசு இதுவரை மக்களுக்கான நிவாரணத்தை வழங்கவில்லை. அரசு மக்களின் துயரங்களை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்படியானால் மட்டுமே மக்களுக்கான ஆட்சியை அமைக்க முடியும்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என இரண்டு தேர்தல்களில் மக்கள் இந்த அரசுக்கு பெரும்பான்மையான ஆதரவினை வழங்கியுள்ளார்கள். எனவே, அரசு இந்த'ஆணைக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும் - என்றார். (ம-இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்". - தோமஸ் ஃபுல்லர்

## கொரோனாவின் பிடியில் இன்னும் 8 பொலிஸார்!

கொழும்பு, நவ.3
பொறளை பொலிஸ் நிலையத்தில் இது வரை 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.
கடந்த சனிக்கிழமை 10 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை களில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து தொற்றுக்குள்ளான பொலிஸாரின் எண்ணிக்கை 14 ஆக உயர்வடைந்துள்ளது. (வ-இ)

## ஊரடங்குச் சட்டம் அமுல்; மருந்தகங்கள் திறக்காது

கொழும்பு, நவ.3
இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மருந்தகங்கள், அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் என்பன திறக்கப்படமாட்டாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
பொதுமக்களுக்கு கடந்த வாரங்களில் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால், வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்களை மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

## தொற்றுக்குள்ளானவரை திட்டிய நபரால் குழப்பம்

கொழும்பு, நவ.3
கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணொருவரை சமாதான நீதிவான் ஒருவர் தகாத வார்த்தைகளால் திட்டிக் குழப்பம் விளைவித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருகையில்,
தொழிற்சாலையொன்றில் பணியாற்றிய வத்தளைப் பிரதேசத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.
அவரை மருத்துவ மனைக்கு கொண்டு செல்வதற்கு நேற்று முன்தினம் அம்புலன்ஸ் வந்துள்ளது. அதன் போது அயலவர் ஒருவர் அந்தப் பெண் பல இடங்களுக்கு சுற்றி திரிந்து கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் எனக் கூறி தகாத வார்த்தைகளால் திட்டி கூச்சலிட்டுள்ளார். கூச்சலிட்டவர் இலங்கையின் சமாதான நீதவான் பதவியில் உள்ளவர் எனத் தெரியவருகிறது.
அந்த நபரின் செய லுக்கு பெண்ணை அழைத்துச் செல்ல வந்த அதிகாரிகள் கடும் எதிர்ப்பு வெளி யிட்டுள்ளனர். தொற்றாளர்களை அவமதிக்க வேண்டாம். உயர் பதவியில் இருந்து கொண்டு இவ்வாறு செயற்படுவது அருவருக்கத்தக்க ஒரு விடயமாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

### மேல் மாகாணத்தில்

# அரச ஊழியர்களுக்கு வீட்டிலிருந்தவாறே பணி

**கொழும்பு, நவ.3**
**கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த, மேல் மாகாணம் மற்றும் பிற முக்கிய நகரங்களிலுள்ள அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் நேற்று முதல் வீட்டிலிருந்தவாறு வேலை செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில், இது தொடர்பான சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பான சுற்றறிக்கை ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, சகல அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்கள், செயலாளர்கள், மாகாணங்களின் தலைமைச் செயலாளர்கள், மாவட்டச் செயலர்கள் , திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொது நிறுவனங்கள், நீதித்துறை சபைகளின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.
அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டதாவது,
வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
அவ்வாறு தீர்மானிக்கப்பட்டதும், தொடர்புடைய கோப்புகள் மற்றும் உபகரணங்கள் முறையான அனுமதியுடன் ஊழியர்களின் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
பொது மக்களுக்கு நேரடியாகச் சேவைகளை வழங்க அனைத்து நிறுவனங்களும் இணையத் தளத்தை உருவாக்க வேண்டும்.
சுயதொழில் புரியும் ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்யச் சொல்லும் அதிகாரம் நிறுவனத்தின் தலைவருக்கு உண்டு, ஆனால் கொரோனாத் தொற்றுக்கான அறிகுறி சிறிதளவேனும் காணப்பட்டால் அந்த ஊழியருக்கு எந்தப் பணியும் வழங்கக்கூடாது.
துறைமுகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள், சுங்கம், நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட அத்தியவசிய சேவைகள் தடையின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

### கொரோனா 3ம் அலை:

## ஒரு மாத காலத்தில் 7,628 தொற்றாளர்

கொழும்பு, நவ.3
மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஒக்ரோபர் 3 ஆம் திகதி முதலாவது கொரோனாத் தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நாட்டில் நேற்று வரை 7 ஆயிரத்து 628 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
இதேவேளை, கடந்த ஜனவரி நாட்டில் முதலாவது தொற்றாளராக சீனப் பெண்ணொருவர் இனங்காணப்பட்டதன் பின்னர் ஒக்ரோபர் 2 ஆம் திகதி வரையான 9 மாத காலப்பகுதியில் நாட்டில் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 3ஆயிரத்து 382 ஆகவே காணப்பட்டது.
இருப்பினும், ஒக்ரோபர் 3 ஆம் திகதியிலிருந்து நேற்று வரையான ஒரு மாத காலப்பகுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. (ந-இ)

# மக்களின் ஆதரவு மொட்டுக்கே!



*கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நம்பிக்கை*

கொழும்பு, நவ.3
குறுகிய காலத்துக்குள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்ற முழுமையான மக்களாணை தொடர்ந்தும் கிடைக்கும் எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 4 வருட நிறைவை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.
மக்களது அபிலாசைகளைக் கருத்திற்கொண்டு பசில் ராஜபக்ச 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்தார்.
2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்களின் அரசியல் தீர்மானம் வெளிப்பட்டது. கட்சியை உருவாக்கி குறுகிய காலத்துக்குள் 71 சபைகளைக் கைப்பற்றுவது சாதாரண விடயமல்ல. அதனைத் தொடர்ந்து 2019 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி இரட்டிப்பானது. சுமார் 69 இலட்ச மக்கள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவுக்கு ஆட்சியதிகாரத்தை வழங்கி பலமான அரச நிர்வாகத்தை உருவாக்கினார்கள்.
பொதுத்தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை எமது கட்சி பெற்றுக்கொண்டது. குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன பெற்றுக்கொண்ட மக்களாணை எதிர் காலத்திலும் பாதுகாக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)



# பேருந்து கட்டணங்களை அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, நவ.3
தனியார் பேருந்துகளுக்கான ஆகக் குறைந்த கட்டணமான 12 ரூபாவை 20 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பில் இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சம்மேளன தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவிக்கையில், நாட்டில் கொரோனா பரவலுக்கு பின்னர் செயற்படும் தனியார் பேருந்துகளின் எண்ணிக்கை சுமார் 20,000இல் இருந்து 5,000 வரை வெகுவாகக் குறைந்துள்ளது. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காகவே பல பேருந்து உரிமையாளர்கள் தமது சேவையைத் தொடர்ந்து வருகின்றனர்.
இந்த நிலையில் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து, பேருந்து சேவையை தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை எமது சம்மேளனம் அதிகாரிகளுக்கு சமர்ப்பித்துள்ளது.
அதில் பேருந்துகளின் ஆரம்பக் கட்டணத்தை அதிகரிப்பதும் ஒரு யோசனையாகும் என்று தெரிவித்துள்ளார். (ந-இ)

# தேசியப்பட்டியல் ஆசனத்தால் திக்குமுக்காடுகின்றது ஐ.தே.க!

கொழும்பு, நவ.3
ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்திருக்கும் ஒரேயொரு தேசியப் பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினருக்கான ஆசனமும் இதுவரையில் நிரப்பப்பட வில்லை. அந்த விவகாரத்தால் கட்சிக்கு இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த ஆச னத்துக்கு ஜோன் அமரதுங்கவையே நியமிக்கவேண்டும் என்று கட்சிக்குள் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளு மன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதன் பின்னர், ஆளும் கட்சியில் அவர் இணைந்துவிடக்கூடுமென்ற அச்சத் தால், அவரை நியமிக்காமல் இருக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அறியமுடி கின்றது.
ஜோன் அமரதுங்கவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில், ஜனாதிபதியின் தூதுக்குழுவில் இணைந்திருந்துள்ளார். தற்போதைய நிலையில், அரசாங்கத்து டன் இணைந்துகொள்வதற்கான சாத் தியக்கூறுகள் அதிகமாகவே இருக்கின் றன என்று ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதனையடுத்தே தன்னுடைய தீர்மா னத்தை ரணில் விக்கிரமசிங்க ஒத்தி வைத்துள்ளார் என்று அறியமுடி கின்றது.
ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் ஆச னத்தை தனக்குத் தராவிடின், அரசிய லிலிருந்தே தான் ஒதுங்கிக்கொள்ளப் போவதாக, அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத் தில் நிறைவேற்றிக்கொள்வதற்கு சில நாள்களுக்கு முன்னர், ஜோன் அமர துங்க பகிரங்கமாகவே அறிவித்திருந் தார். (ஏ-இ)



## கடற்கரை தூய்மையாக்கல்

மூதூர், நவ.3
திருகோணமலை நகர கடற்கரையோ ரம் சார்ந்த சமுத்திர பிரதேசம் நேற்று இலங்கை கடற்படையினரால் தூய் மைப்படுத்தப்பட்டது.
கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பதின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தச் செயற்பாடு முன்னெ டுக்கப்பட்டுள்ளது.
கடலை அண்டிய பகுதியில் மேற்கொள் ளப்படும் இந்தத் தூய்மைப்படுத்தல் செயற்பாட்டில் 20 இற்கும் மேற்பட்ட கடற்படைச் சிப்பாய்கள் கலந்துகொண் டனர். (ஐ-40)

## பாடசாலைக்கு குழாய்க்கிணறு

வவுனியா, நவ.3
வவுனியா, ஓமந்தை புதிய வேலர் சின்னக் குளம் கிராமத்தில் உள்ள ஆனந்த குமார சாமி வித்தியாலய மாணவர்களின் குடி தண்ணீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு குழாய்க்கிணறு அமைத்துக் கையளிக்கப் பட்டுள்ளது.
"எம் கடமை"அமைப்பின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் அன்டனி தலைமையில் அந்தக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர்களான சின்னப்பு தேவராஜா மற்றும் திருமதி சோதி மணி தேவராஜா ஆகியோரின் நினைவாக கனடாவில் வசிக்கும் தேவராஜா ஜெயமோ கனின் நிதி உதவியுடன்அந்தக் குழாய் கிணறு அமைக்கப்பட்டது என்று தெரிவிக் கப்பட்டது. (ப)

# இயற்கையை நம்பிய எமக்கு மிஞ்சியது வெறும் ஏமாற்றமே

## விவசாயிகள் கண்ணீர்

யாழ்ப்பாணம், நவ. 3
**இயற்கையை நம்பியதால் ஏமாற்றம் தான் கிடைத்து என வன்னிப் பெருநிலப்பரப்பிபைச் சேர்ந்த விவசாயிகள் கவலையிட்டுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
வழமையாக ஐப்பசி மாதம் பருவ மழை ஆரம்பித்து விடும் ஆகை யால் பெரும்போகப் பயிர்செய்கை ஆரம்பிப்பது வழக்கம். இம்முறை யும் வழமைபோல் மழை பெய்யு மென நம்பி பயிற்சியை ஆரம்பித் தோம். ஒரு மாதம் கடந்துள்ளது. ஒரு துளியேனும் மழை பெய்யவில்லை. அனைத்துப் பயிர்களும் முழையி லேயே கருகி அழியும் நிலை ஏற் பட்டுள்ளது. ஒருவேளை உணவுக் காவது தமது பயிரைக் காக்க வேண்டும் என்று சில விவசாயிகள் அருகில் உள்ள ஆற்றங்கரையில் வடிந்தோடும் தண்ணீரை நீர் பம் பிகள் மூலம் பாய்ச்சி வருகின்றனர், எம்மிடம் இருந்த பணத்தை எல் லாம் செலவழித்தும், சில தனியார் வங்கிகளில் கடன் பெற்று இம் முறை விவசாயத்தில் ஈடுபட்டோம். ஆனால் இறுதியில் ஏமாற்றமே மிஞ்சி யுள்ளது என்றனர். (ப-113)

## மதிப்பளிப்பு

சாவகச்சேரி. நவ. 3
தென்னை, கித்துள் மற்றும் பனை அபி விருத்தி இராஜாங்க அமைச்சர் அருந் திக பெர்னாண்டோ அண்மையில் வரணி வடிசாலையை பார்வையிடச் சென்றபோது தென்மராட்சி கொத்தணி யி னரால் மதிப்பளிக்கப்பட்டார்.
யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்க ளால் உற்பத்தி செய்யப்படும் பனம் சராயம் மற்றும் போத்தலில் அடைக்கப் படும் கள் போன்றவற்றுக்கு அறவிடப் படும் வரியைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமைக்காகவே அவர் கௌர விக் கப்பட்டார்.
அவருடன் பனை அபிவிருத்திச் சங்கத் தலைவர் கிரிசாந்த பத்திராச, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் மதிப்பளிக்கப்பட்டனர். (ப-9)



## ஈஸ்வரிபுரம் - மறவன்குளம் வீதி அபிவிருத்தி ஆரம்பம்

வவுனியா, நவ.3
வவுனியா மாவட்டத்தில் ஈஸ்வரிபுரத்தில் இருந்து மறவன்குளம் வரையான 2.4 கிலோ மீற்றர் பிரதான வீதியை காப்பெட் வீதியாக அபிவிருத்தி செய்யும், ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கா. மஸ்தான் கலந்துகொண்டு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார். அவரு டன் வவுனியா நகரசபை உப நகர பிதா குமாரசமி, வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் பொறியியலாளர், தொழில்நுட்ப உத் தியோகத்தர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்ட னர்.
ஜனாதிபதியின் விஷேட வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நாடு தழுவிய ரீதி யில் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு இலட்சம் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் அந்த வீதியும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. (ப)

## தமிழ்த் தேசிய மரநடுகை யாழில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.3
கார்த்திகை மாத மரநடுகை வேலைத்திட் டம் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் செயலாளர் ஐங்கரநேசனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி பார்வதி பரமேஸ்வரர் ஆலயத் தின் முன்பாக நேற்று புன்னை மரக் கன்றை நட்டு அவர் மரநடுகையை ஆரம் பித்து வைத்தார்.
இதன்போது இம்முறை வீடுவீடாகச் சென்று மரக் கன்றுகளை வழங்க உள் ளாதத் தெரிவித்த ஐங்கரநேசன், அந்த மரங்கள் சரியான முறையில் வளர்க்கப்ப டுன்றனவா என்பது தொடர்பிலும், அவ் வாறு சரியான முறையில் மரங்களைப் பராமரித்து வளர்ப்பவர்களைக் கௌரவிக் கும் நிகழ்வும் மாதத்தின் இறுதியில் இடம் பெறும் என்றும் தெரிவித்தார். (ப-20)

## பொலிஸ் காவலரண் அமைத்து விவரங்களைப் பதிய தீர்மானம்

### மட்டு. மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி முடிவு

மட்டக்களப்பு, நவ.3
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல் லைப் பகுதியில், பொலிஸ் சோதனைச்சாவடி அமைத்து மாவட்டத்துக்குள் உள்நுழைப வர்கள், வெளிச்செல்பவர்கள் தொடர்பான விவரங்களை பதிவு செய்வதற்கு மாவட்ட கொரோ னாத் தடுப்புச் செயலணி தீர்மா னித்துள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தின் தற் போதைய கொவிட்-19 நிலைமை தொடர்பாக ஆராய்பவதற்காக, மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம், மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற் றது. இதன்போதே மேற்கண்ட வாறு தீர்மானிக்கப்பட்டது.
மாவட்டத்தின் எல்லைகளான வெருகல், பெரியநீலாவணை, பதுளை வீதி, றெதிதென்ன போன்ற இடங்களில் பொலிஸ் சோதனைச் சாவடிகளை அமைத்து வெளிமாவட்டங்க ளில் இருந்து மட்டக்களப்புக்கு வருகின்றவர்கள், மட்டக்களப் பிலிருந்து வெளிமாவட்டங்க ளுக்குச் செல்வோருடைய பெயர் விவரங்களைப் பதிவுசெய்வது டன், அந்த விவரங்களை மாவட்ட சுகாதாரப் பணி மனைக்கு அனுப்பி, அவர்களைக் கண்கா ணித்து தனிமைப்படுத்த நடவ டிக்கை எடுப்பது என்று தீர்மா னிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

# இலங்கை முழுவதும் கொரோனா அபாயம்!

## எச்சரிக்கிறார் சுகாதார அமைச்சின் செயலாளர்



**கொழும்பு, நவ.3**

**இலங்கை முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முணசிங்க தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தொற்று நிலைமைகள் குறித்து விளக்கம் அளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாத் தொற்று ஏற்பட்ட ஒருவர் தும்மினால் நூற்றுக்கணக்கான வைரஸ் துகள்கள் பரவும் அபாயம் உள்ளது. மார்ச் மாதம் பரவிய கொரோனாத் தொற்று மூலம் இது வரை மில்லியன் கணக்கான வைரஸ் துகள்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே நோயுற்றவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். அனைவரும் வீடுகளிலேயே இருப்பது மிகவும் உசிதமானது. இதன் மூலம் வைரஸ் தொற்று நாடு முழுவதிலும் பரவுவதைத் தடுக்கக்கூடிய சாத்தியமுண்டு-என்றார். (ற-இ)

# மக்கள் ஆணையை மீறக்கூடாது அரசு

## சஜித் இடித்துரைப்பு



கொழும்பு, நவ. 3

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையைமீறி அரசுசெயற்படக்கூடாது. கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு இணையாக, கொரேனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அநுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா ஒழிப்பு செயற்பாட்டுக்கு இணையாக, கொரேனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், கடந்த காலங்களில் இந்த இரண்டு செயற்பாடுகளும் சரிசமமாக இடம்பெற்றதைக் காணமுடியவில்லை. இதனால், மக்களே இன்று, தங்களுக்கு உதவுமாறு அரசிடம் கேட்க ஆரம்பித்துள்ளார்கள்.

எனினும், அரசு இதுவரை மக்களுக்கான நிவாரணத்தை வழங்கவில்லை. அரசு மக்களின் துயரங்களை முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்படியானால் மட்டுமே மக்களுக்கான ஆட்சியை அமைக்க முடியும். ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என இரண்டு தேர்தல்களில் மக்கள் இந்த அரசுக்கு பெரும்பான்மையான ஆதரவினை வழங்கியுள்ளார்கள். எனவே, அரசு இந்த ஆணைக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பது தான் எமது கோரிக்கையாகும் என்றார். (ம-இ)

## வீடுகளுக்கு பொருள்கள் விநியோகித்தல் ஆரம்பம்

கொழும்பு, நவ.3

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்கான அத்தியாவசிய பொருள்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை பொலிஸ் நிலையங்களில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற-இ)

## மத்திய மாகாணத்தில் 106 பேருக்கு கொரோனா

கொழும்பு, நவ.3

இலங்கையின் மத்திய மாகாணத்தில் இது வரை கொரோனாத் தொற்றுக்குள்ளான 106 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கண்டி மாவட்டத்தில் 33 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 48 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 25 பேரும் இவ்வாறு கொரோனாத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனால் மத்திய மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அதனை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அமெரிக்கா...

வொஷிங்டன், நவ.3

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறுகிறது. கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் இறுதிக்கட்ட வாக்குப் பதிவுகள் இன்று நடைபெறவுள்ளன.

நடைபெறவுள்ள 59ஆவது ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்க மக்கள் தமது நாட்டின் 46ஆவது ஜனாதிபதியைத் தெரிவுசெய்யவுள்ளனர்.

இதில் குடியரசுக்கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பைடன் போட்டியிடுகிறார். இந்தத் தேர்தலின் ஊடாக அமெரிக்காவின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்ப டவுள்ளது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் கொரோனா நெருக்கடியை ட்ரம்ப் கையாண்ட விதம் மற்றும் அமெரிக்காவில் தலைதூக்கியுள்ள நிறவாதம் என்பன டொனால்ட்ரம்ப்பின் வெற்றிக்கு சவாலான விடயங்களாக உள்ளன. இதேவேளை, 'ரொய்டேர்ஸ்' வெளியிட்ட கருத்துக் கணிப்பில் ட்ரம்ப்புக்கு 42 வீதமானோர் வாக்களித்துள்ளனர். பைடனுக்கு 52 வீதமானோர் வாக்களித்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

### 'தண்ணி...

சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் உணவகம் நடத்திய நல்லூரைச் சேர்ந்தவர் மற்றும் அந்த உணவகத்தில் பணியாற்றிய புங்குடுதீவு மற்றும் வேலணையைச் சேர்ந்த மூவர் கடந்த 25ஆம் திகதி இரவு கொழும்பிலிருந்து NCG நிறுவனத்தின் WP NC - 8760 என்ற பேருந்தில் யாழ்ப்பாணம் வந்தனர். இவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இவர்களுடன் பயணித்த 43 பேரின் தொலைபேசி இலக்கங்கள் பேருந்து நிறுவனத்தால் சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அதற்கு அமைவாக 37 பேர் இனம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். எஞ்சிய 6 பேரின் தொலைபேசிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவர்களைக் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவர்களது தொலைபேசிகள் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. தொலைபேசி நிறுவனங்கள் ஊடாகவே அவர்களது இருப்பிடங்களை கண்டறியமுடியும். தொலைபேசி நிறுவனங்களிடம் அந்தக் கோரிக்கையை நீதிமன்றம் ஊடாகவே முன்வைக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் 6 பேரையும் கண்டறியும் பணியில்' தாமதம் ஏற்பட்டுள்ளது. (ஒ,5)

### புதுக்குடியிருப்பு

ளப்பட்ட சோதனையில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

கொரோனாத் தொற்றாளரின் மகள் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் நிலையில், அவருக்கும் தொற்று இல்லை என்று நேற்றைய பரிசோதனை முடிவுகளில் தெரியவந்துள்ளது. (ஒ,5)

### கொரோனா நேற்றும்...

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சமூகத்தில் இருந்தவர்களுக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்களுக்குமே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 335ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 6 ஆயிரத்து 65 தொற்றாளர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 5 ஆயிரத்து 249 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 21பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். (த-22)

### எம்.பி...

ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வரவுள்ளார் எனவும், அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக 'மொட்டு'க் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கவுள்ளார் என்று சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இன்று அல்லது எதிர்வரும் 12 ஆம் திகதி பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட நபரொருவர் தேர்தலில் போட்டியிட முடியாது. இந்தநிலையில் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கான தடை அரசமைப்பின் 20ஆவதுதிருத்தச்சட்டத்தின்ஊடாகநீக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருகின்றார் எனவும், அவருக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (த-22)

# வெளி மாவட்டத்தாரை அனுமதிக்காதீர்கள்

## மன்னாரில் ரெலோ கோரிக்கை

மன்னார்,நவ.3


**வெளி மாவட்டங்களில் இருந்து மன்னாருக்குள் வரும் நபர்களை மன்னாருக்குள் அனுமதிக்க வேண்டாம் என மன்னார் மாவட்டதைச் சேர்ந்த ரெலோ அமைப்பினரால் மாவட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;

நாடுமுழுவதும் கொரோனா மூன்றாவது அலை மிக வேகமாகப் பரவி வரும் அதே வேளை, இறப்புக்களும் அதிகரித்துள்ளன. எனவே வெளி மாவட்டங்களில் இருந்து மன்னார் மாவட்டத்திற்குள் வருவோருக்கு தற்காலிகமாகப் பயணத் தடை விதிப்பதன்மூலம் மன்னார் மாவட்டத்தில் கொரோனா சமூகப் பரவலைத் தடுக்க முடியும். எனவே இது தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும் என்றனர். (ப-213)

# அழியும் நிலையில் 600 ஏக்கர் நெல்

## அம்பலவன் விவசாயிகள் மழைவேண்டி பொங்கல்



முல்லைத்தீவு, நவ.3

முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணையில் காலபோகத்து மழையை நம்பி 600 ஏக்கரில் விதைப்புச் செய்யப்பட்ட நெல் மழையின்றி கருகும் நிலையில் உள்ளதாகத் தெரிவித்து விவசாயிகள், மழைவேண்டி பூசை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பலவன் பொக்கணை கிராமத்தில் வெளி வயல் பிள்ளையார் கோவிலில் பொங்கல் பொங்கி படைத்து வழிபாட்டில் ஈடுபட்டனர்.

காலபோகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள்தற்போது பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். உரிய மழைவீழ்ச்சி இல்லாததன் காரணமாக விவவாசாயிகள் தமது பயிர்களைக் காப்பாற்றுவதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். பலவிவசாயிகள் புழுதி விதைப்பை மேற்கொண்டுவிட்டு மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் பருவ கால மழைவீழ்ச்சி இன்னும் பதிவாகாத நிலையில் அம்பலவன் பொக்கணைப் பகுதியில் 600 ஏக்கர் வயல் நிலங்களில் விதைக்கப்பட்ட நெல் முளை வந்தும் கருகும் நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் அம்பலவன் பொக்கணை என்ற ஒரு கிராமத்தில் பச்சைப்புல்மோட்டை வெளி, காயாவடி, குஞ்சுப்புலவு, கோயிலடித்தறை, அல்லிப்பள்ளம், விளாத்தி வெட்டுவான், நீராவி வெளி, உணாவில்,பூவரசம்மோட்டை, நெல்லிமோட்டை, றோட்டுப்பிலவு, உள்ளிப்பிலவு, உள்ளிட்ட 600 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நெல்களே இவ்வாறு கருகும் நிலையில் உள்ளன. அவற்றைக் காப்பாற்றுவததற்காக மழை வீழ்ச்சி வேண்டி விவசாயிகள் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். (ப-19)

# நாட்டை முடக்குவதை கோத்தா விரும்பவில்லை!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு,நவ.3

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தினால் நாட்டின் சாதாரண பொதுமக்கள் முகம் கொடுக்கும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாட்டை முடக்க வேண்டாம் என ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக, ஒரு வார்த்துக்கு நாட்டை முடக்குவதற்குரிய ஆலோசனையை ஜனாதிபதியிடம் முன்வைத்தோம்.

எனினும் நாளாந்த ஊதியத்தில், சிறிய வர்த்தகங்கள் மூலம் வாழ்க்கை நடத்தும் மக்கள், பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதனால் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் பிரதேசங்களை மாத்திரம் தெரிவு செய்து தனிமைப்படுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அதனடிப்படையில் நாட்டை முடக்கும் தீர்மானம் கைவிடப்பட்டது-என்றார். (க-இ)



# வாழைச்சேனையில் 315 பேருக்கு டெங்கு

மட்டக்களப்பு, நவ.3

வாழைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இந்த வருடம் நேற்றுமுன்தினம் வரை 315 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மருத்துவ அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் முதலாம் திகதி வரையான ஒரு மாத காலத்தில் 41 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள வீடுகளில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்படுகின்ற இடங்களை அடையாளப்படுத்தி மக்களுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கையும், வீட்டு வளாகங்களைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கையும் நேற்று திங்கட்கிழமை வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ப-150)

# கட்சித் தலைவர் கனவை கலைத்தவர் மைத்திரியே

## நவீன் திஸ்ஸநாயக்க விரக்தி



கொழும்பு, நவ.3

கூட்டரசு கலைக்கப்படாவிட்டிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை நானே ஏற்றிருப்பேன். அதை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழப்பிவிட்டார் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸ்ஸ நாயக்க.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கான சகல தகுதியும் என்னிடம் உள்ளது. தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்த படியான மூத்த தலைவராக இருக்கின்றேன்.

இரண்டு தசாப்தங்களாக வகித்த நாடாளுமன்ற உறுப்புரிமை தற்போது பறிபோனது கவலையளிக்கிறது. என்மீது சேறு பூசப்பட்ட தன் விளைவாகவே எனது பாட்டனாரும் தந்தையாரும் வெற்றி கொண்ட பகுதியில் என்னால் தேர்தலில் வெற்றி கொள்ள முடியவில்லை. ஐக்கிய தேசியக்கட்சி பிளவுபட்டமையால், கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் இரண்டு மில்லியன் பேர் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லாமலேயே இருந்துவிட்டனர்.

நாடாளுமன்றத் தேர்தலில், குறைந்தபட்சமாக 15 ஆசனங்களையாவது ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பிலேயே தனித்து போட்டியிட்டோம். மீண்டும் ஒருமுறை கட்சி மாறும் எண்ணம் எனக்கில்லை.

கட்சி பிளவுபடுவதை விரும்பாததால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து செல்லும் தீர்மானத்தை எடுக்க வேண்டாம் என்று சஜித் பிரேமதாச விடம் கேட்டுக்கொண்டிருந்தேன். கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நானே முதன்முதலாக கோரிக்கை விட்டிருந்தேன்.

ஐ.தே.கவுக்கு தலைவராகும் ஆசை எனக்குள்ளது. கட்சியின் யாப்பின் பிரகாரமும் விதிமுறைகளுக்கு ஏற்பவும், ரணில் விக்கிரமசிங்க, விலகினால் அந்தக் கட்சியின் பிரதித் தலைவருக்கே தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டும். ஆகையால், சஜிதை எட்டி உதைத்து தள்ளிவிட்டு, தலைமைத்துவதை அடைவதற்கு எவரும் விரும்பியிருக்கவில்லை - என்றார். (எ- இ)

# தனிமைப்படுத்தல் நிறைவு; 228 பேர் வீடு திரும்பினர்

வவுனியா, நவ.3

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த 228 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

முப்படையினரால் பராமரிக்கப்படும் 5 தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இதுவரை 64 ஆயிரத்து 955 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவுசெய்துள்ளனர்.

இதேவேளை 4,039 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# சுகாதார நடைமுறைகளை கண்காணிக்க படையினர்

## தென்மராட்சி பிரதேச செயலர் உத்தரவு

**சாவகச்சேரி, நவ. 3**

**தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதார விதிமுறைகளைப் பேணாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் பொலிஸாருக்கும் படையினருக்கும் உத்தரவிட்டுள்ளார்.**

கொவிட்-19 தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் அதிகரித்து வரும் கொவிட்-19 தொற்றை தென்மராட்சி பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. கலந்துரையாடலில் சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்கள், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், படையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சுகாதார விதிமுறைகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டுமென கலந்துரையாடலின்போது, சுகாதார மருத்துவ அதிகாரியால் வலியுறுத்தப்பட்டது. இதனை அடுத்து மக்கள் கூடும் இடங்களில் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி போன்ற சுகாதார நடைமுறைகளைப் பேணாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரையும் படையினரையும் பிரதேச செயலர் பணித்துள்ளார். (ப-9)

## ரயிலுடன் மோதி குடும்பஸ்தர் சாவு

கொழும்பு, நவ.3



எலுவன்குளம், அருவக்காடு பகுதியில் ரயிலில் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

சுண்ணாம்புக் கல் கொண்டு சென்ற ரயிலில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வனாத்துவில்லுப் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என்றும், ஒரு பிள்ளையின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

## ஊரடங்கு நீடிப்பு இதுவே காரணம்

மேல்மாகாணத்திலேயே அதிகளவு கொரோனா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனாலேயே அந்த மாகாணத்தில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளி என ஒருவர் அடையாளம் காணப்பட்டதும், அவர் மருத்துவமனையில் அனுதிக்கப்படுவார். அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

சிறிய பகுதியொன்றில் ஒன்றிரண்டு வீடுகளை தனிமைப்படுத்தினால், அந்த பகுதியைத் தனிமைப்படுத்தலாம். இதனையே கிராமங்களை தனிமைப்படுத்தியதாக நாங்கள் தெரிவிக்கின்றோம்.

தற்போது கம்பஹா, கொழும்பு, களுத்துறையைச் சேர்ந்தவர்களே தொற்றாளர்களாக அதிகம் இனங்காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மேல் மாகாணத்தில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)




# மூன்றாவது போகம் முல்லையில் அமோகம்

## அறுவடையில் விவசாயிகள்

முல்லைத்தீவு, நவ.3


முல்லைத்தீவு உடையார் கட்டுக்குளத்தின் கீழ் 300 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட 3ஆவது போகம் வெற்றியளித்துள்ளது. விவசாயிகள் தற்போது அதன் அறுவடையில் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலவுவதைத் தவிர்க்கவும், விவசாயச் செய்கையினை ஊக்குவிக்கும் வகையிலும், குளத்தின் நீர்மட்டத்தை கருத்தில் கொண்டு கடந்த ஜூன் மாதம் உடையார்கட்டு விவசாயிகளால், 300 ஏக்கரில் இடைப்போகம் செய்யப்பட்டது. அந்தப் போகம் வெற்றியடைந்து. அதனுடைய அறுவடையில் விவசாயிகள் தற்போது ஈடுபட்டுள்ளார்கள்.

பத்து ஏக்கர் வரையில் நாற்று அறுவடை இயந்திரம் மூலம் நாற்று நடப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இடைப்போகத்தின் அறுவடையில் விவசாயிகள் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இடைப்போக அறுவடையைத் தொடர்ந்து காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையை அந்த விவசாயிகள் முன்னெடுத்துள்ளனர்.

காலபோக நெற்செய்கை மேற்கொள்வதால், இடைப்போகத்தில் அறுவடையான நெல்லைக் காயப்போடுவதற்கு காலம் போதாது பச்சை நெல்லாக 75 கிலோ நெல் 3100 ரூபா தொடக்கம் 3500 வரையில் தனியாரால் கொள்வனவு செய்யப்படுகிறது. இதனால், அறுவடையின் பலனைப் பெற முடியவில்லை என விவசாயிகள் கவலை தெரவித்துள்ளார்கள். (ப-19)



## தீயணைப்புப் பிரிவில் ஐவருக்கு கொரோனா

கொழும்பு,நவ.3

கொழும்பு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவில் ஐந்து பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து கொரோனா நோயாளர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் பதிவான ஆயிரத்து 767 கொரோனா நோயாளர்களில் ஆயிரத்து 635 பேர் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## பல்பொருள் அங்காடியில் இருவருக்கு கொரோனா

கொழும்பு, நவ.3

கொட்டாவவில் பல்பொருள் அங்காடியில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்கும் நோக்கில், எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின்போதே தொற்று இருந்தமை க்ண்டறியப்பட்டது.

அதனையடுத்து அனைத்து ஊழியர்களுக்கும் பி.சி. ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## 28 தொற்றாளர்களில் 17 பேர் இந்தியர்கள்

கொழும்பு,நவ.3

முல்லேரியா நவகமுவ தனியார் தொழிற்சாலையில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 17 பேர் இந்தியர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையில் பணிபுரியும் 78 ஊழியர்களில் 28 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலையின் அதிகாரிகள் தனியார் சுகாதார பிரிவினரைக் கொண்டு நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் தொழிற்சாலைக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றாளர்கள் என கண்டறியப்பட்டவர்கள் கொஸ்கம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-இ)

## பிள்ளையானுக்கு விஷேட அனுமதி

மட்டக்களப்பு, நவ. 3

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்ற, நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அனுமதி கோரிய வழக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சிறைச்சாலை அத்தியட்சகரின் அனுமதியைப் பெற்று அதன்மூலம் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(க-இ)

## ஆதரவு அளித்திருந்தாலும் அதிகாரம் கொடாதீர்கள்!

### குணதாச அமரசேகர வலியுறுத்து

கொழும்பு, நவ.3

20ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக்கொள்ளக்கூடாது என்று சிங்கள தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அவர்கள் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அரசுக்கு ஆதரவு வழங்கியிருக்கலாம். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக்கொண்டால், தாங்கள் பதவி விலகுவோம் என்று சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நாங்களும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளோம். ஆதரவளித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக்கொள்ளக்கூடாது.

அவர்களுக்கு அமைச்சர் பதவியோ, அமைப்பாளர் பதவியோ எவற்றையும் வழங்கக்கூடாது. அரசு இந்த விடயத்தில் கடுமையான தீர்மானத்தில் இருக்க வேண்டும். அதேவேளை, சிங்கள மக்களை ஒன்றிணைக்க முடியாதுள்ளது. சிங்கள மக்கள் ஒன்றிணையாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. என்றார்.

(எ-இ)

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

### 01.01.2021 முதல் 31.12.2021 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், களஞ்சிய அறைகள், பொது மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2021

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 03.11.2020 – 16.11.2020 வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 17.11.2020 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 17.11.2020 மு.ப 10.30 மணி

மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மீன் சந்தை | 1,473,100.00 | 14,700.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 861,300.00 | 8,600.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,242,600.00 | 12,400.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 100,300.00 | 1,000.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 75,000.00 | 750.00 | 750.00 |
| 06 | களஞ்சிய அறை இல - 01 | 26,000.00 | 500.00 | 750.00 |
| 07 | களஞ்சிய அறை இல - 02 | 24,800.00 | 500.00 | 750.00 |
| 08 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 14,300.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 18,700.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 16,700.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 15,700.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 12 | வரணி பொதுச்சந்தை | 100,200.00 | 1,000.00 | 750.00 |
| 13 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6,900.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | | | |
| 14 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 176,600.00 | 1,800.00 | 750.00 |
| 15 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 260,200.00 | 2,600.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 16 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 300,800.00 | 3,000.00 | 750.00 |
| 17 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 69,000.00 | 690.00 | 750.00 |
| 18 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,800.00 | 500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,800.00 | 500.00 | 750.00 |
| 20 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 31,100.00 | 500.00 | 750.00 |
| 21 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 10,500.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 22 | நாவற்குழி பொதுச்சந்தை | 32,500.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 03.11.2020 தொடக்கம் 16.11.2020 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.(Vat, NBT நீங்கலாக)
4. 17.11.2020 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **“தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்”** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை **“பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்”** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
03.11.2020

சேவை நயப்பும் மணிவிழாவாழ்த்தும்




திருமதி வளர்மதி நகுலேஸ்வரதாசன்
(பகுதித்தலைவர்)
BA, PGDE.MED – S.L.T.S.1
எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி
முப்பத்துமூன்று வருட சேவையை
நிறைவு செய்து அகவை அறுபதில்
சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது ஆசிரியர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் புகழோடும், குடும்ப மகிழ்வோடும் எல்லா நலங்களும் பெற்று நீடூழிவாழ அகம் மிக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

zoom
A/L 2021
மீட்டல் வகுப்பு
Revision & Paper
AL/2020இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான Day Class
கணிதம் & உயிரியல் பிரிவு
ஆரம்பம்: 04-11-2020
காலம் : திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 7:00 மணிமுதல் 12.30 வரை
சாதாரண வகுப்புக்கள் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டாலும் ZOOM ஊடான ONLINE வகுப்புக்கள் இறுதிவரை தொடரும்
கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் குழாமினால் ஆரம்பிக்கப்படுகின்றது.
இணைந்த கணிதம் : S.Premnath B.Sc., PGDE
7:00 am - 8.30 am
English & Tamil Medium
உயிரியல் : V.Umashanger B.Sc., PGDE
7:00 am - 8.30 am
பௌதிகவியல் : S.R.Jeyakumar B.Sc., PGDE
9:00 am - 10.30 am
இரசாயனவியல் : V.Parameswaran B.Sc., PGDE
11:00 am - 12.30 pm
ஆரம்ப அலகிலிருந்து இறுதிவரை வினாக்கள் செய்யப்படும்.
(Past Papers & Model Questions)
தொடர்பு: Noble Academy
15, 36th Lane, Wellawatte, Colombo-06
011-2363831 / 011-2505816 / 076 75 80 659
இலங்கையின் எந்தப் பகுதியிலுள்ள மாணவர்களும் இந்த Online(Zoom) வகுப்பில் பங்குபெறலாம்.

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதார் - Assembly of God**
**முகவரி : காங்கேசன்துறை வீதி, மல்லாகம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 12 ஆதன இலக்கம் 20. காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான களைசிட்டி நிலப்பரப்பு 03 குழி 16.72 கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் R.நவரட்ணம் எனும் பெயரில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது 1935 ம் ஆண்டு தை மாதம் 02 ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் B.D.S விஜயசேகர முகதாவில் 1795 ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி இராசையா எட்வேட் பொன்னையா பெண் தவமணி என்பவர்களுக்கு வந்தடைந்தது. அவர்கள் இருவரும் இறக்க அவர்களின் நான்கு பிள்ளைகளான சாள்ஸ் எட்வேட் பொன்னையா. பானு நாகேந்திரம். டேவிட் அர்ஜினன் பொன்னையா. ரதினி எலிசபத் சதாநந்தன் ஆகியோர்களினால் 2019ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் ந.தக்ஷாமினி முகதாவில் 250ம் இலக்க நன்கொடை உறுதிப்படி Assembly of God தேவாலயத்திற்கு கையளிக்கப்பட்டது.

**ஆதன விபரம்.**
வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான "களைசிட்டி" நிலப்பரப்பு 03 குழி 16.72 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.A இளையதம்பி அவர்கள் வரைந்த 1372/A இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

**கிழக்கு - பிரதீபன் பெண் இரங்கேஸ்வரி, கனகசபை பெண் நல்லமுத்துவின் ஆதனம்**
**வடக்கு - இராமநாதர் பரமேஸ்வரனின் ஆதனம்**
**மேற்கு - காங்கேசன்துறை வீதி**
**தெற்கு - கனகசபை பெண் நல்லமுத்து, மகேஸ்வரலிங்கம் மதனராஜாவின் ஆதனம்**

மேற்குறித்த ஆதனத்தை Assembly of God எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்ட பூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப் பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**
**03.11.2020**

## சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய தினம் 14ஆம் பக்கத்தில் வெளியாகிய மரண அறிவித்தல் பிரசுரத்தில் **அம்பலவாணர் யோகநாதன்** அன்னார் தர்மநாயகியின் அன்புக் கணவரும் என்பதனை சேர்த்து வாசிக்கவும்.
தகவல்: குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

மாதகலில் உள்ள வீடு ஒன்றிற்கு
வீட்டிலேயே தங்கி வீட்டுப்பணி
செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
வயது : 20 - 60
**076 342 8297, 077 794 7247**

## நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம் - முருங்கன்
## அரிசி ஆலை வாடகைக்கு விடுதல்

நானாட்டான் பகுதி ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான 3000மூடை நெல் களஞ்சியப்படுத் தக்கூடியதும் 150மூடை நெல் காயவிடும் தளத்தினைக் கொண்டதுமான இயங்கு நிலையில் உள்ள பொறித்தொகுதியினைக் கொண்டதுமான புத்திரகண்டானில் (நானாட்டான் முருங்கன் வீதி) அமைந்துள்ள NACO அரிசி ஆலை எதிர்வரும் 03 வருடங்களுக்கு (01.02.2021 தொடக்கம் 31.01.2024) வாடகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வாடகைக்கு நிபந்தனை**

01. முதல் வருட வாடகை ஆகக்குறைந்த தொகை ரூபா நாற்பதனாயிரம் (ரூபா 40000.00) அதற்கு மேல் விண்ணப்பிக்கலாம்
02. அடுத்து வரும் இரு வருடங்களுக்கு கூடிய விலைகோரல் வாடகையில் இருந்து வருடாந்தம் ரூபா பத்தாயிரம் (ரூபா 10000.00) அதிகரிக்கப்படும்
03. வாடகை முற்பணமாக ரூபா ஐந்து இலட்சம் (ரூபா 500000.00 ) வைப்பிடப்பட வேண்டும் ஒப்பந்தம் முடிவில் இத்தொகை மீள வழங்கப்படும்
04. ஒப்பந்தமானது சட்டத்தரணி ஊடாக மேற்கொள்ளப்படும்
05. மீளளிக்கப்படாத வைப்பு தொகையாக ரூபா ஐயாயிரமும் (ரூபா 5000.00) மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா இருபத்தையாயிரம் (ரூபா 25000.00)ம் செலுத்தி சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டின் பிரதி இணைக்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட வேண்டும்
06. அரிசியாலை நடைமுறை திருத்தங்கள் தொடர்பாக பேசி தீர்க்கப்படும்
07. உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக விண்ணப்பிக்கும் சங்க அங்கத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
08. கேள்வி கோரல் எதிர்வரும் 21.11.2020ந் திகதி நண்பகல் 12.00 மணியுடன் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.
09. கேள்வி கோரல் விண்ணப்பம் **பொது முகாமையாளர்; நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம், முருங்கன்** என்னும் முகவரிக்கு பதிவு தபால் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம் விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மூலையில் அரிசி ஆலைக்கான கேள்வி கோரல் என குறிப்பிடப்பட வேண்டும்

அரிசி ஆலையினை பார்வையிட விரும்பின் 0232050390 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்

பொது முகாமையாளர்,
நானாட்டான் பகுதி ப.நோ.கூ.சங்கம்.
முருங்கன்

## 54 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 • 05 • 1942



மறைவு
03 • 11 • 1966

### வைத்திலிங்கம் தம்பி மகாலிங்கம்
(உதவி பொலிஸ் பரிசோதகர்)

யாழ்/இந்துக் கல்லூரியும், யாழ் / மத்திய கல்லூரி – பழைய மாணவன், யாழ்/மத்திய கல்லூரி மாணவத் தலைவர், மெய்வல்லுநர் போட்டிகளிலும் துடுப்பாட்டத்திலும் உதைப்பந்தாட்டத்திலும் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். 1963 இல் யாழ்.பாடசாலைகள் இணைந்த துடுப்பாட்டக் குழுவுக்கு தலைமை தாங்கி கொழும்பு பாடசாலைகளின் இணைந்த துடுப்பாட்டக்குழுக்களுக்கு எதிராக அந்தப் போட்டியில் கூடிய ஓட்டங்களைப் பெற்று (எழுபது) பந்துவீச்சில் கூடிய 11(6+5) விக்கெட்டுக்களை வீழ்த்திய பெருமையும் இவரைச் சார்ந்தது. அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய தேசிய மெய்வல்லுநர் போட்டியில் 1964 ஆம், 1965 இலும் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடம்பெற்று விளங்கினார். அரசாங்க திணைக்களங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

16/4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

இவரின் மறைவினால்துயருறும்
V.T.லிங்கம்ஸ்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னையா ஆறுமுகராசா

மலர்வு 21.03.1942
உதிர்வு 27.10.2018

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழி நடத்தும் எங்கள் அப்பாவே !


கைதடி மத்தி,
கைதடி

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

அம்பாந்தோட்டை

## மீன்பிடித் துறைமுகத்தில் இருவருக்கு கொரோனா

அம்பாந்தோட்டை, நவ 3
அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் இரண்டு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவர்கள் இருவரும் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இவர்களில் ஒருவர் அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பேலியகொட மீன் விற்பனை நிலையத்துக்கு மீன்கள் ஏற்றி செல்லும் வாகனத்தின் சாரதி ஆவார். மற்றையவர் மீன் விற்பனை செய்பவராவார். இவர்களுடன் நெருங்கிப் பழகியோரை தனிமைப்படுத்துவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரு-இ)



## சிகிரியாவுக்கு பூட்டு

கொழும்பு, நவ.3
மறு அறிவிப்பு வரும் வரை சிகிரியாவுக்கு வர எவருக்கும் அனுமதி இல்லை என சிகிரிய மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.
நாட்டில் தற்போது கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துவரும் நிலையிலேயே இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ரு-இ)

திருமலை பொது மருத்துவமனையில்

## மருத்துவருக்கும் வந்தது கொரோனா

திருகோணமலை, நவ.3
திருகோணமலை பொது மருத்துவமனையில் கடமையாற்றிய வைத்தியர் (வயது - 30) ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ஜகத் விக்ர மரத்ன தெரிவித்தார்.
கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த குறித்த வைத்தியர் விடுமுறைக்கு வீடு சென்று கடந்த 27 ஆம் திகதி மீண்டும் மருத்துவமனைக்கு வந்துள்ளார். இதையடுத்து அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனையில், தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ரு-இ)

# ஐரோப்பிய வகை கொரோனாவே இலங்கையில் பரவல்!

### வைத்தியர் சந்திமா ஜீவந்தரா தகவல்

கொழும்பு, நவ.3
**இலங்கையில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் ஐரோப்பியாவில் பரவியிருக்கும் கொரோனா வைரஸுக்கு சமமானது. இது இந்தியாவில் பரவியிருக்கும் வைரஸ் குழுவைச் சேர்ந்தது அல்ல என்பது பரிசோதனைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என ஒவ்வாமை, நோயெதிர்ப்பு, செல் உயிரியல் நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சந்திமா ஜீவந்தரா தெரிவித்துள்ளார்.**



தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தற்போதைய பரவலின் பிரதான கொத்தணிகள், மினுவங்கொட ஆடைத் தொழிற்சாலை, பேலியகொட மீன்சந்தை, அதேபோல, கொழும்பு மாநகர சபைக்கு அண்மையிலும் உருவாகியுள்ளன. அங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளை அடிப்படையாக வைத்துப்பார்க்கும் போதுபேலியகொட, மினுவங்கொடவில் ஒரே வகையான வைரஸே பரவியுள்ளது. அது இதுவரையிலும் மாறவில்லை.எனினும், அருகிலிருந்தவர்களுக்கு பரவியிருக்கும் வைரஸ் மாறுபட்டுள்ளது என்றார். எங்களுடைய தேடுதலின்படி அது ஐரோப்பாவுக்கு அண்மையில் சுவீடன், டென்மார்க் உள்ளிட்ட நாடுகளில்பரவியிருக்கும்வைரஸை ஒத்ததாக அமைந்துள்ளது. எனினும், இந்தியாவை ஒத்ததாக அமைந்திருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு விசேட பஸ், ரயில் சேவைகள்



கொழும்பு, நவ.3
இலங்கை போக்குவரத்து சபை மற்றும் புகையிரத திணைக்களம் ஆகியன உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகளை வழங்க தீர்மானித்துள்ளன.
பரீட்சை நிலையங்களுக்கு சமுகமளிக்கும் உயர்தர மாணவர்கள் மற்றும் கடமை நேர அதிகாரிகள் ஆகியோருக்கே இச் சேவைகள் வழங்கப்படவுள்ளன.
இதேவேளை, பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் கடமை நேர அதிகாரிகள் போக்குவரத்து தொடர்பில் ஏதேனும் சிக்கல்களை எதிர்நோக்குவார்களாயின் 0771056032 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளுமாறு இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்சிலி ரணவக்க தெரிவித்துள்ளார். (ரு -இ)



## '20'இன் நன்மைகள் வாயை அடைக்குமாம்!

### எம்.பி நஸீர் அஹமட் தெரிவிப்பு

கொழும்பு, நவ.3
20 ஐ ஆதரித்த அரசியல் வியூகத்துக்கான பலாபலன்கள் சமூக நலன்களாக விரைவில் வெளிப்படும்போது பலரின் வாய்கள் அடைபட்டுப்போகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.
அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தமை பற்றி தெளிவூட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.
"பேரினவாதத்தின் விழிப்புக்கு மத்தியில் முஸ்லிம் சமூகம் சார்ந்த சில நலன்களை வியூகத்தின் வடிவிலே சாதிக்க வேண்டியுள்ளது.
இதனால்தான் இன்று வரைக்கும் மௌனியாகச் செயற்படுகிறோம். காலப்போக்கில் சமூகநலன்கள் கை கூடுகையில், எங்களால் பேசப்பட்டவைகள் எவை என்பதை முஸ்லிம் சமூகம் உணர்ந்துகொள்ளும். இப்போது எம்மை விமர்சிப்பவர்கள் அப்போது வாயடைத்து போவது உறுதி. காலத்துக்கு ஏற்ப அரசியல் காய்களை நகர்த்த வேண்டிய நிலைமைக்கு சிறுபான்மையினர் தள்ளப்பட்டுள்ளதை இவர்கள் விளங்காதுள்ளமைதான் எமக்குள்ள கவலை "எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## பொம்மை தொழிற்சாலை ஊழியர்களுக்கும் தொற்று

கொழும்பு, நவ.4
வத்தள ஹெந்தல, கெரவலப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள பொம்மை தொழிற்சாலையில் பணியாற்றும் 49 ஊழியர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொற்றுக்குஉள்ளானவர்களில் 45 பெண்களும் 4 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். ஜெர்மன் இணை நிறுவனமான இத் தொழிற்சாலையில் 1000 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அத்துடன் இங்கு [illegible]க்கப்படும் விளைய[illegible] பொம்மைகள் வெளி[illegible]க்கு ஏற்றுமதி செய்[illegible]கின்றன என்பது கு[illegible]பிடத்தக்கது. [illegible]

## குணமடைந்தோருக்கு பி.சி.ஆர். தேவையில்லை

கொழும்பு, நவ.3
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறுபவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளத் தேவையில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பிரதானி வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
தொற்று அறிகுறிகள் அற்ற அல்லது மிகக் குறைந்தளவில் தொற்று அறிகுறிகள் உள்ளவர்களிடம் காணப்படும் வைரஸ் சாதாரணமாக 10 நாள்களின் பின்னர் பிறருக்கு பரவாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
எனவே வைத்தியசாலையிலிருந்து செல்பவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்காது மேலும் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு மாத்திரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கடும் தொற்று அறிகுறிகள் உள்ளவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சைகளின் பின்னரே வீட்டுக்கு அனுப்புவது குறித்து தீர்மானிக்கப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ரு-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பாராத நன்மை உண்டு. சிந்தித்துச் செயல்பட வேண்டும். செயலில் வேகம் வேண்டாம். பணியாளர்களுக்கு லாபம் உண்டு. வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை.

**இடபம்:** வேலையாட்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உங்களை ஆதரிப்பவர்கள் அதி கரிப்பர். தொழிலில் கவனம் தேவை. . வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** உங்களது முயற்சி கைகூடும். நீண்ட நாள் பகை அகலும். செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பெண்களின் வருத்தம் தீரும். திடீர் பயணம் தித்திக்கும். பிரபலத் தொடர்பு வெற்றி தரும்.

**கடகம்:** முன் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. வாழ்க்கைத் துணையின் நீண்ட நாளையக் கனவு நிறைவேறும். தேவைகள் நிறைவேறும். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**சிம்மம்:** மனக்குழப்பம் அகலும். உங்களது எதிரிகளின் பலம் குறையும். குடும்பச் சுமை கூடும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் வரும். முன்னர் எடுத்த முடிவுகளால் சில ஆச்சர்யங்கள் நிகழலாம்.

**கன்னி:** வீடு, இடம் வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். எதிலும் சிக்கனம் தேவை. நேற்று ஏற்பட்டிருந்த வருத்தங்களும், கவலைகளும் தீரும்.

**துலாம்:** நண்பர்களால் சேமிப்பு கரையும். திட்டமிட்ட பயணம் ரத்தாகலாம். யாருடனும் அநாவசியப் பகை வளராமல் பார்த்துக் கொள்ளுங்கள். வளர்ச்சி மேலோங்கும்.

**விருச்சிகம்:** மதியத்திற்கு மேல் நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சி தரும். மகிழ்ச்சி கூடும். பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள். நல்ல செய்திகள் வரும். வியாபார விரோதிகள் விலகுவர்.

**தனுசு:** மேலதிகாரியிடம் பணிந்து பேசி நன்மைகளை பெற வேண்டிய நாள். அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காகச் செலவு வரும்.

**மகரம்:** மனம் சந்தோஷப்படும்படியான சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். முயற்சி வெற்றி தரும். சுப நிகழ்ச்சி பற்றிய பேச்சுக்கள் நல்லபடியாக முடிவாகும்..

**கும்பம்:** நீங்கள் மதித்துப் போற்றும் நபர்களின் ஆதரவு கிடைக்கும். தாயின் உடல்நலம் சீராகி நிம்மதி அளிக்கும். மனம் மகிழும்.

**மீனம்:** முயற்சி ஒன்றில் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். மறைமுக போட்டிகளை, முனைப்புடன் முறியடிப்பீர்கள். முன்பைவிட வருமானமும், லாபமும் அதிகரிக்கும்.

# உலக சுகாதார அமைப்பின் தலைவரும் தனிமைப்படுத்தலில்!

ஜெனிவா, நவ. 3

உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் கொரோனாத் தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் தொடர்பு கொண்டுள்ளதையடுத்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்.


Tedros Adhanom Ghebreyesus @DrTedros · 6h
I have been identified as a contact of someone who has tested positive for #COVID19. I am well and without symptoms but will self-quarantine over the coming days, in line with @WHO protocols, and work from home.
1.3K 1.8K 7.3K
Show this thread

இது தொடர்பில் அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபர் ஒருவர் என்னை தொடர்புகொண்டது தெரிய வந்துள்ளது. நான் நலமுடனேயே உள்ளேன். அறிகுறிகள் எதுவும் இல்லை. எனினும், எதிர்வரும் நாள்களில் உலக சுகாதார அமைப்பு வரைமுறைகளின்படி, என்னைத் தனிமைப்படுத்தி கொள்வேன். வீட்டில் இருந்தபடியே பணி செய்வேன். நாம் அனைவரும் சுகாதார வழிகாட்டுதலின்படி செயற்பட வேண்டும் என்பது மிக முக்கியம். இதன் வழியே கொரோனா பரவலின் தொடர் சங்கிலியை நாம் உடைக்க முடியும். வைரஸை ஒழிக்கமுடியும். சுகாதார விடயங்களைப் பாதுகாக்க முடியும். கொரோனாவின் கடுமையான பாதிப்பில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய பணிகளை நானும் என்னுடன் பணி புரிபவர்களும் தொடர்ந்து மேற் கொள்வோம் என்றார். (வ-இ)

## இரு கிராமங்கள் முடக்கப்பட்டன

நீர்கொழும்பு, நவ.3

பன்னல சுகாதார பிரிவுக்குட்பட்ட இரண்டு கிராமங்கள் நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் முடக்கப்பட்டுள்ளன என பன்னல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. பன்னல பிரதேச சபையின் பணியாளர்கள் மூவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே ஹியவல, ஆரியகம ஆகிய இரு கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## காப்புறுதி நிறுவனத்திலும் பாய்ந்தது கொரோனா

கொழும்பு, நவ.3

காப்புறுதி நிறுவனம் ஒன்றின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, அவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ந-இ)

## மேல் மாகாணத்திலிருந்து வந்தவர்கள் பதிவு செய்க!

*அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பணிப்புரை*

கொழும்பு, நவ.3


மேல் மாகாணத்திலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்தவர்கள் உடனடியாக பிரதேச செயலகங்களிலும் சுகாதார அதிகாரிகளிடமும் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம். அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ளனர். இதைப் பொதுமக்கள் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும்.

கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலிருந்து அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்தவர்கள் தொடர்பாக பொதுமக்கள் தகவல் அறிந்தால் உடனடியாக சுகாதாரப் பகுதியினருக்கு அறிவிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை நகரங்கள் தோறும் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர். என்றார். (ற-இ)



## நாடாளுமன்ற சமையலறை பணியாளர் திடீர்ச் சாவு!

*கொரோனாத் தொற்றில்லை என அறிவிப்பு*

கொழும்பு, நவ. 3

இலங்கை நாடாளுமன்றத்தின் சமையலறை பணியாளர் ஒருவர் திடீரென உயிரிழந்தார். அவருக்கு துரித கதியில் மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனையில், கொரோனாத் தொற்றால் அவர் உயிரிழக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில், நாடாளுமன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த குறித்த நபருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார். பிரேதப் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக அவர் இறக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளதுடன், திடீர் மாரடைப்பால் அவர் இறந்துள்ளார் என சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-இ)

## வேட்டைக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு!

கதிர்காமம், நவ.3

விலங்குகளை வேட்டையாடுபவர்களுக்கும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் கதிர்காமம் கட்டகமுவ பகுதிக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 8.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது விலங்குகளை இறைச்சிக்காக வேட்டையாடுபவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் விலங்கு வேட்டையாளர்களால் இரு மான்கள் இறைச்சிக்காக வேட்டையாடப்பட்டுள்ளன எனவும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.



# 2021 ஆம் ஆண்டில் கொரோனா தடுப்பூசி?

## ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்து

கொழும்பு, நவ.3

கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. எனினும் 2021ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை கொரோனா வைரஸ் தடுப்பூசி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், தடுப்பூசிகளின் மூன்றாம் கட்டப் பரிசோதனைகள் இந்த வருட இறுதியிலேயே ஆரம்பிக்கவுள்ளன. 2021ஆம் ஆண்டிலேயே இந்த தடுப்பூசிகள் நாடுகளுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என உலக சுகாதார மையத்தின் மேம்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் அலுவலர் சஹானி சந்ரரட்ண தெரிவித்துள்ளார். (ந -இ)





## 98 ஆவது கூட்டுறவு தின விழா

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்ப்பாணம் வலிகாமம், பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 98 ஆவது கூட்டுறவு தின விழா கடந்த சனிக்கிழமை கொத்தணிக் கலையரங்க மண்டபத்தில் தலைவர் செ. செல்வராஜா தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சங்கங்களின் அங்கத்தவர்களுடைய ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், உயர்தரம் கற்கும் மாணவர்கள், உயர் கல்வியில் பட்டம் பெற்றவர்கள், தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்தவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. (ப -63)


## ஊரடங்கு அமுலில் இருந்தாலும் உயர்தரப் பரீட்சை நடைபெறும்

கொழும்பு, நவ.3

மேல் மாகாணம் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தாலும், உயர்தரப் பரீட்சை வழமைபோன்று நடைபெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கானபோக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் போக்குவரத்தில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் 077 10 56 032 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக அழைக்க முடியும் என்று போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார். உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு பரீட்சை மண்டபத்திற்கு செல்வதில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எந்த வகையிலும் தடையாக அமையாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள் ளார்.

அவர்களது தேசிய அடையாள அட்டை மற்றும் பணியிட அடையாள அட்டையை ஊரடங்கு அடையாள அட்டையாகப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். எனவே, பரீட்சார்த்திகளும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவோரும் ஊர டங்குச் சட்டத்தை முட்டுக்கட்டை யாக கருதக்கூடாது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டினார். (ற-இ)



## பனம் விதைகள் நடுகை

கிளிநொச்சி, நவ.3

''கற்பகத் திட்டம்" எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் ஒரு தொகைப் பனம் விதைகள் நேற்று முன்தினம் நடுகை செய்யப்பட்டுள்ளன. பரந்தன் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம், பரந்தன் இளைஞர் வட்டம், குமரபுரம் கமக்கார அமைப்பு, ஸ்ரீமுருகன்ஆலய நிர்வாகம், பசுந்தாரகை அமைப்பு, குமரபும் கிராம அபிவிருத்திச்சங்கம், குமரபுரம் மற்றும் காஞ்சிபுரம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகள் இணைந்து இவ்வாறு பனம் விதைகளை நடுகை செய்துள்ளனர். பரந்தன், உமையாள்புரம், மற்றும் விளாஓடை போன்ற பகுதிகளிலிலேயே பனம் விதைகள் நடப்பட்டன. (ப-222)



## ஆழ் மனதின் அற்புத சக்தி

நீங்கள் ஒரு தொழிலைச் செய்ய எண்ணும் போது என்ன மனப்பான் மையில் ஈடுபடுகிறீர்களோ, அதற்கேற்ப உங்கள் செயல் வெற்றி - தோல்வியை அடைகிறது, வெற்றி மனப்பான்மையுடன் செயல் பட்டால் வெற்றியும், தோல்வி மானப்பான்மையுடன் தன்னம்பிக்கையற்று செயல்பட்டால் தோல்வியையும் அடைகிறீர்கள், ஆகவே வெற்றியும், தோல்வியும் உங்கள் மனப்பான்மையிலிருந்து உருவெடுக்கிறது,

மனப்பான்மை என்பது, உங்கள் உள்ளத்தில் தொடர்ந்து நிலைபெறும் சிந்தனைதான் மனப்பான்மையாக மாறுகிறது, வெற்றி என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இயங்கும் மனச்சித்திரங்களே வெற்றி சிந்தனை , இது மீண்டும் மீண்டும் பதிவாகும் போது வெற்றி மனப்பான்மையாகமாறுகிறது, நீங்கள் விரும்பினால் மனச்சித்திரத்தை மாற்றி ஆழ் மனம் (இதனை சமயோசித அறிவாகக் கொள்ளலாம்) கட்டளை உங்களுக்கு கைகொடுக்கும், ஆழ்மனக் கட்டளை மூலமும், மனச்சித்திரங்கள் மூலமும் வெற்றி மனோபாவத்தை உருவாக்கிட முடியும்.

நீங்கள் ஆழ்மனச்சக்தியை பெருக்கிக் கொண்டால் உழைப்பில் பத்தில் ஒருபங்கு குறைந்தாலும், விளைவு பத்து மடங்காக உயர்ந்திட முடியும், கடும் உழைப்புக்கு ஈடு இணை இல்லை என்பதை ஆழ்மன துக்கு ஈடு இணை இல்லை என்ற புது பழமொழியை புரிந்து கொள்ளலாம்,

ஆழ்மனதை ஒரு தேவதை என்றே கூறலாம், அது ஆற்றல் மிக்க தேவதை, உங்களுக்கு விசுவாசமான தேவதை. நீங்கள் கேட்பதை பெற்று தரும் சக்தி உண்டு,ஆக அது தேவதையோ, அரக்கனோ என்பது நீங்கள் கொடுக்கும் கட்டளையைப் பொறுத்தது. உங்கள் கட்டளையின் எண்ணம் முரண்பாடானால் கிடைப்பதும் முரண்பா டாகவே அமையும், உங்களின் ஆழ்மனச்சக்தி பெருகி விட்டால் நீங்கள் நினைத்ததை விரும்பியவாறு அடைய முடியும். இதன் கருத்தைக் கொண்டே ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

எவராயினும், எந்நிலையிலும், ஆழ்மனக்கட்டளையை நம்பிக்கையோடு கொடுத்து அடையப்போகிறோம் என்னும் விசுவாசத்தை வளர்த்து நினைத்ததை நினைத்தபடியே அடைய முடியும். வேண்டியதை விரும்பியபடியே பெற முடியும். ஒரு குறிக்கோளுக் கான கட்டளையை மட்டும் தேர்வு செய்து கொள்ள வேண்டும், மற்ற விருப்பு வெறுப்பு ஆசைகளை விலக்கி வைத்துவிட்டு, உறங்குவதற்கு முன் படுக்கையில் சம்மனமிட்டு - தியானத்திற்கு அமர்வது போன்று - சுவாசத்தில் ஆழ்மனதை முழுவதையும் கவனத்தில் குவித்தால் எண்ண அலைகள் அடங்கும், நீங்கள் தேர்ந்தெடுத்த ஆழ்மனக்கட்டளையை உணர்ச்சியுடன் , ஒலி நயத்துடன், உதட்டசைவுடன் உருவேற்றுக. உங்கள் குறிக்கோள் நிறைவேறி விட்டது போன்ற நிலையை மனச்சித்திரமாக கற்பனையில் காண்க.

இதனை உறங்குவதற்கு முன்பும், உறங்கி எழுந்த பின்னும் தினமும் 30 நிமிடங்கள் கட்டளை கொடுத்தால், உங்கள் ஆழ்மனம் அற்புதமாக செயல்பட தொடங்கிவிடும். ஆழ்மனம் என்பது ஐம்புலங்களால் அறிய இயலாது ஆனால் அதன் விளைவை ஐம்புலங்களால் அறிய முடியும், நிறைவேறப் போகிறது என்ற நம்பிக்கையுடன் கட்டளை கொடுங்கள். அப்போது ஆழ்மனத்தின் அற்புத சக்தி வெளிப்படும்.

ஆழ்மனக்கட்டளையை குறிக்கோளுக்கும். தேவைக்கும் தக்கபடி நீங்களே உருவாக்கிக் கொள்ளலாம். உருவாக்கிய கட்டளைகளை உங்களை சுயகருத்தேற்றம் செய்யும் போது வெற்றி உங்களை அடையும். நம் வாழ்க்கை என்பது நம் எண்ணத்தால் உருவாக்கப்படுகிறது. எண்ணத்திற்கேற்ப வாழ்க்கை. எண்ணம் என்பது தொடர்மனச் சித்திரமே. எணணம் - செயல் ஆகிறது, செயல் - பழக்கம் ஆகிறது, பழக்கம் - வழக்கமாகிறது.

வழக்கம் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. ஆழ்மனக்கட்டளை , மனச்சித்திரம் இவ்விரு உத்திகளையும் ஒரே சமயத்தில் தொடர்ந்து பயன்படுத்தும்போது உங்கள் மனோசக்தி பெருக்கம் அடைகிறது. சிந்தனையிலிருந்து - செயல் பிறக்கிறது. மனத்தின் எண்ணமே செயலுக்கு ஊக்கம் . எண்ணம் திண்ணம் பெறும்போது நினைத்ததை அடைய வெற்றியாக முடிகிறது.

ஆழ்மனக்கட்டளையும. மனச்சித்திரமும் சேர்ந்தது தியானம் - தியானம் தவம் ஏனப்படுகிறது. தவ வலிமையால் நம் முன்னோர்கள் நம்ப வியலாத அற்புதமான சாதனைகளைச் செய்ததனர் என்பதை நாம் அறிவோம். ஆழ்மன கட்டளை கொடுக்கும்போதே அதற்கேற்ப மனச்சித்திரம் வரைவதன் மூலம் நீங்கள் அற்புதங்களை நிகழ்த்துபவராக மாறிவிடுகிறீர்கள். உங்களின் நீண்டகால குறிக்கோள்களான தியானம் செய்யும் போது உங்களது நம்பிக்கை ஒரு மந்திர சக்தியாகவே பெருக்கெடுக்கிறது. எனவே ஆழ்மன சிந்தனை - தியானம் மூலம் வெற்றி நிச்சயம்

## அறிகுறி தென்பட்டால் ‘0117966366’ அழைக்கவும்



கொழும்பு, நவ.3

ஊரடங்கு நடைமுறையில் உள்ள வேளைகளில், கொரோனா நோய் அறிகுறிகள் தென்படின், 0117 966 366 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல் வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலின் காரணமாக, பொது மக்களின் நலன் கருதி விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஏதேனும் அறிகுறிகள் தென்படுமாயின், மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன்னர், அழைப்பை ஏற்படுத்தி தகவலை வழங்குமாறு, கொவிட்-19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் அறிவித்துள்ளது. (க-இ)

## வெளிமாவட்ட யாசகர்களால் கொரோனா பரவும் அபாயம்

### வவுனியா வர்த்தகர்கள் விசனம்

வவுனியாவில் யாசகம் எடுக்க வரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களால் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அநுராதபுரம், புத்தளம் மற்றும் குருநாகல் போன்ற பகுதிகளிலிருந்து வவுனியாவுக்கு யாசகம் எடுப்பதற்காக வருபவர்களால் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று வவுனியாவைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர். யாசகம் எடுப்பவர்கள் முகக்கவசம் அணியாமல், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடன் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் வர்த்தக நிலையங்களுக்கு யாசகம் கேட்டு வருகின்றனர். நாட்டில் கொரோனாத் தோற்று வேகமாகப் பரவிவரும் நிலையில் வவுனியாவுக்கு வரும் யாசகர்கள் நேரடியாக வர்த்தக நிலையங்களுக்குள் நுழைவதால் தொற்று ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாவட்டச் செயலாளர் உட்பட சுகாதாரத் துறையினர் கருத்தில் கொள்ளவேண்டும் என்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப)

# தென்மராட்சி மக்கள் குடிதண்ணீருக்கு அந்தரிப்பு

## நிதி இல்லை என்கிறது பிரதேச செயலகம்



**சாவகச்சேரி, நவ.3**

**பிரதேசத்தில் குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை காணப்படும் கிராமங்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால், அவற்றைப் பெற்றுவந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். குடிதண்ணீர் வழங்குவதற்காக வழங்கப்பட்ட நிதி முடிவடைந்ததால் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்று பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.**

"மழை இல்லை என்று தெரிந்தும், குடிதண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதால் கிராமத்தில் நாங்கள் பெரும் சிரங்களை எதிர்கொண்டுள்ளோம். இங்கு உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலையில் தண்ணீர் தேடி பல மைல்கள் தூரம் தினமும் அலைகிறோம். எமக்கு வழங்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத்தை மழை பெய்யும் வரையாவது தொடர்ந்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"இடர்கால முகாமைத்துவ அமைச்சினால் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையாக உள்ள 26 கிராமங்களுக்கு சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் அதிகார சபை போன்றவை மூலம் பௌசர் களிலும் குழாய் மூலமும் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. எனினும் அமைச்சு வழங்கிய நிதி முடிவடைந்ததால், ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன். குடிதண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது" என பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (ப-9)

## கரைதுறைப்பற்றில் திறந்தவெளி சந்தை

முல்லைத்தீவு, நவ.3

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட பொதுச் சந்தைகளில் சன நெருக்கத்தைக் குறைக்கும் நோக்கிலான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 30ஆம் திகதி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபைக் குட்பட்ட பகுதிகளான கரைச்சி குடியிருப்பு மற்றும் அலம்பில் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அதையடுத்து கரைதுறைப்பற்றில் உள்ள சந்தைகளில் சன நெரிசலைக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தினுள் சந்தைகளை வைக்காது பரந்துபட்ட இடங்களில் சந்தைகள் கூடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரியவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது-என்றார். (ஐ-246)

## மாந்தை கிழக்கின் பாதீடு நிறைவேற்றம்!

முல்லைத்தீவு, நவ.3

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கின் பிரதேச சபை தவிசாளர் ம.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற அமர்வில் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 46.48 மில்லியன் ரூபா பாதீடின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் நான்கு கட்சிகளைச் சேர்ந்த 13 உறுப்பினர்களுக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-19)

## மன்னாரில் இதுவரை 12 பேருக்குத் தொற்று

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



மன்னார், நவ.3

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 1083 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இதுவரை 12 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் (ஒக்ரோபர்) கொரோனாத் தொற்றுள்ளவர்கள் 12 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 10 பேர் பட்டித்தோட்டம் பகுதியில் கட்டட வேலைகளில் ஈடுபட்டவர்களாவர். ஏனைய இருவரும் பேலிய கொட கொரோனா கொத்தணியுடன் தொடர்பு உள்ளவர்களாவர். இவர்களில் 11 பேர் இரணவில சிகிச்சை நிலையத்துக்கும், ஒருவர் கந்தக்காடு சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் தமது சிகிச்சைகளை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். தற்போது தொற்று உடையவர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் இருந்தும் 173 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றார். (ஐ-56)

## முஸ்லிம்களின் தகனமுறையை மாற்ற எம்.பிக்கள் முயற்சியாம்

### அலி சப்ரி கூறுகின்றார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களைத்தகனம் செய்யும் தற்போதைய முறைமையை மாற்றுவதற்கு 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சித்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;

சுகாதார அதிகாரிகள் வகுத்துள்ள வழிகாட்டுதல்களால், கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களைத் தகனம் செய்ய, அரசு தகன முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்களின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைத்தாலும், சடலம் இஸ்லாமிய முறைப்படி சடங்குகளுக்கு உட்படுத்தப்படும்போது, கொரோனா வைரஸ் பரவும் வாய்ப்பு அதிகளவில் உள்ளது. வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்குத் தேவையான கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன், இஸ்லாமிய சடங்குகளின்படி, அத்தகைய உடல்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதற்கு, ஏற்கனவே எடுத்த முடிவை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிக்கின்றனர். என்றார். (எ-இ)

# தமிழரின் முகத்தில் அறைந்துள்ளது ஐ.நா

## கடுமையாகச் சாடியது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

**கொழும்பு, நவ.3**
**ஐக்கிய நாடுகள் சபையின் 75ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுக்குப் பிரதமர் மகிந்த ராஜபக்ச பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டமையானது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் முகத்திலறையும் செயலாகும். இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாகச் சாடியுள்ளது.**

போர்க்குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களின் பொதுவான விம்பம் துடைத்தெறியப்படுவதற்குத் துணைபுரியக்கூடிய செயல்களில் ஐக்கிய நாடுகள் சபை ஈடுபடக்கூடாது. ஆனால், கடந்த வாரம் அத்தகையதொரு செயலையே இலங்கையின் ஐ.நா. அலுவலகம் செய்தது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐக்கிய நாடுகள் ப்ணிப்பாளர் லூயிஸ் சார்போனே தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தால் இணையவழி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)

## நீரைச் சிக்கனமாக பயன்படுத்தவும்

கொழும்பு, நவ.3
பயிர்செய்கைக்கான தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் எதிர்பார்க்கப்பட்ட மழைவீழ்ச்சி கிடைக்காமையால், பெரும்போகத்தில் மேற்கொள்ளப்படும் பயிர்செய்கைக்குத் தேவையான தண்ணீர் போதுமானதாக இல்லை என்று நீர்ப்பாசனத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் பயிர்ச்செய்கைக்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் குளங்களைத் தவிர, ஏனைய குளங்களையும் பயன்படுத்துவதற்கு பொறியலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (க-இ)



## ஒன்லைன் மூலமாக வழக்கு விசாரணை?

கொழும்பு, நவ.3
தற்போது நாட்டில் நிலவும் கொவிட் நிலைமை காரணமாக, ஒன்லைன் முறையில் வழக்குகளை விசாரிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் தொற்று நீக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் இணைந்து கொண்ட போதே அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

நீதி அமைச்சருடன், மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசப்பந்து தென்னகோனும் இணைந்திருந்தார். (க-இ)

## சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்றவும்

*கண்டாவளை பிரதேச செயலர் தெரிவிப்பு*

கண்டாவளை பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளுமாறு கண்டாவளை பிரதேச செயலாளர் எஸ். பிருந்தாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரித்ததாவது;
நாட்டில் சில இடங்களில் தற்போது கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் காணப்படுவதால், மாவட்டத்தைஅண்டி இருக்கும் நாம் முன்னேற்பாடாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பிரதேச செயலகத்துக்கு அவசிய தேவை கருதி வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரம் வருகை தரவும். ஏனைய தேவைகளை தமது கிராம அலுவலர்களூடாகப் பெற்றுக் கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேவை ஏற்படின் 0212060300 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்ளலாம்- என்றார். (ஐ-113)

நெலுவ-லங்காகம வீதி

## நிர்மாணப்பணிகள் இறுதிக் கட்டத்தில்

கொழும்பு,நவ.3
பாதுகாக்கப்பட்ட சிங்கராஜ வனப்பகுதியிலுள்ள நெலுவ லங்காகம வீதியின் நிர்மாண பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

சுற்றுச்சூழலுக்கு ப்ாதிப்பு ஏற்படாத வகையில், 90 நாள்களுக்குள் வீதிப்புனரமைப்பை நிறைவுசெய்யுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதற்கமைவாக தேசிய கட்டட ஆய்வு மையத்தின் அனுமதியுடன் இராணுவத்தின் பொறியியற் படையணி, நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தது.

நெலுவ வாருகந்தனிய முதல் லங்காகம வரையான 6.5 கிலோ மீற்றர் நீளமான வீதி முதல் கட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

5.4 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்டதாக இரண்டாம் கட்ட பணிகள் இடம்பெற்றன. அதில் 1.8 கிலோமீற்றர் தூரத்தின் நிர்மாணப் பணிகள் முழுமை பெற்றுள்ளன.

இதற்கு முன்னர் நெலுவையிலிருந்து தெனியாயவுக்கு செல்வதற்கு 4 மணித்தியாலம் சென்றது. இருப்பினும் புதிய வீதியின் நிர்மாணப் பணிகளைத் தொடர்ந்து 45 நிமிடங்களிலும் குறைந்த நேரத்தில் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## விடுதியில் மறித்தவுடன் இளைஞன் தப்பி ஓட்டம்

*பளையில் சம்பவம்*



கிளிநொச்சி, நவ 3
காய்ச்சல் என்று கூறி மருந்து எடுக்கச் சென்ற இளைஞனை வைத்தியசாலை விடுதியில் அனுமதித்தவுடன் அந்த இளைஞன் அங்கிருந்து தப்பித்துச் சென்ற சம்பவம் கடந்த சனிக்கிழமை பளை வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து, கடந்த சனிக்கிழமை பளை வைத்தியசாலைக்கு மருந்து எடுக்கச் சென்ற இளைஞனே இவ்வாறு தப்பித்துச் சென்றுள்ளார். எனினும், அவர் பளை பொதுச் சந்தையில் வைத்துப் பிடிக்கப்பட்டு, கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞன் பளை வைத்தியசாலையில், தனக்கு காய்சல் மற்றும் தலைச்சுற்று இருப்பதாகத் தெரிவித்துள்ளார். இதனால் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுமாறு மருத்துவர் கூறியுள்ளார். இதனை அடுத்தே அவர் அங்கிருந்து தப்பித்துள்ளார். குறித்த இளைஞன் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-6)

## தென்மராட்சியில் கடல் பெருக்கு; இடம்பெயர்வைச் சந்தித்த மக்கள்

வயல்களும் பாதிப்பு

சாவகச்சேரி, நவ.3
தென்மராட்சி பிரதேச கடலேரிகள் பெருக்கெடுத்ததால், கடற்கரையோரங்களை அண்டியுள்ள மக்கள், தமது தற்காலிக கொட்டில்களில் இருந்து சனசமூக நிலையக் கட்டடங்கள் மற்றும் உறவினர் வீடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்தோடு தனங்களப்பு பகுதியில் ஆறு ஏக்கர் நெற்காணிகளில் உள்ள பயிர்களும் கடல் நீரில் மூழ்கியுள்ளன.

மழை ,காற்று இல்லாத நிலையில் வடக்கில்சில கடல்கள் கடந்தசில நாள்களாகப் பெருக்கெடுத்துள்ளன. அவ்வாறுபெருக்கெடுத்தகடல்நீர் கிராமங்களுக்குள்ளும் புகுந்துள்ளது.

ஊர்காவற்றுறை, பூநகரி, நாவாந்துறை போன்ற பிரதேசங்களிலும் இந்த நிலை ஏற்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை இரவு தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கடல்களும், பெருக்கெடுத்து கிராமத்துக்குள் புகுந்துள்ளன. இதனால் கடற்கரையோரங்களை அண்டியுள்ள தற்காலிக வீடுகளில் வசித்த மக்கள் இடப்பெயர்வுகளைச் சந்தித்துள்ளனர்.

தனங்களப்பு பகுதியில் 20க்கும்மேற்பட்ட வயல்காணிகளுக்குள் கடல்நீர் புகுந்துள்ளது. இதனால் ஆறு ஏக்கர் வயல்களில் காணப்பட்ட பயிர்கள் கடலில் மூழ்கி அழிவடையும் நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடல் நீர் வயல்களுக்குள் புகுந்தால் எதிர்காலத்தில் வயல்களில் நெல் விதைக்க முடியாத நிலை ஏற்படும் என்று நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (ஐ-9)

# கரையொதுங்கின 100 திமிங்கிலங்கள்

கொழும்பு, நவ. 3

பாணந்துறை கடற்கரையில் சுமார் 100 திமிங்கிலங்கள் நேற்றுக் கரையொதுங்கியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றை மீண்டும் கடலுக்குள் அனுப்புவதற்கான முயற்சிகளை பொலிஸார், இலங்கை கடலோர காவல்படையினரின் உதவியுடன் முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கரையொதுங்கியுள்ள திமிங்கிலங்கள் 10 முதல் 25 அடி நீளமுடையவை என்று கூறப்படுகிறது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டபோதிலும் திமிங்கிலங்களைப் பார்வையிட மக்கள் கடற்கரையில் கூடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# பொம்பியோ தங்கிய விடுதியில் கொரோனா!

கொழும்பு, நவ. 3

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு கொழும்பில் தங்கியிருந்த நட்சத்திர விடுதியின் பணியாளர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகி உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் இரகசியமாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-இ)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.10.2020 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் திருநாவுக்கரசு நீலாம்பிகை

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (03.11.2020) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சம்பச்சிமாவடி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24.04.1938
இறைவன் அடியில் 03.11.2019

### அமரர் இராசையா குமாரசாமி

அப்பாவுக்கு......

"ஓடி உருண்டது உங்களைப் பிரிந்து ஓராண்டு அப்பா
வாடி வதங்குகின்றோம் எண்ணி நிதம் அப்பா
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சத்தில் உங்கள் நினைவுகள்
என்றென்றும் நிலைத்திருக்கும் அப்பா"

பாடசாலை வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி அன்னப்பிள்ளை

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (02.11.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன் ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கட்டையன் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், தவராசா (ரக்ரர் தம்பி) லீலாவதி, தங்கராசா (ரக்ரர் பட்டு) சிவலிங்கம் (ரக்ரர் கண்டன்) ரவிச்சந்திரன் (ரக்ரர் சாந்தி) ஜெயக்குமார் (ரக்ரர் ரவி) யோகராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, இந்திரன், ஜெயராணி, குயினி றீற்றா, இதயா, சந்திரவதனி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2020) செவ்வாய்க்கிழமை புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

தகவல் : குடும்பத்தினர்.
077 8817 839

## கேள்வி அறிவித்தல்

### வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
### முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி.

கரவெட்டி ,சாவகச்சேரி ,வட்டுக்கோட்டை மற்றும் அமுத சுரபி LIBCO's சார்பாக வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியினால் கீழ் குறிக்கப்படும் பொருட்கொள்வனவிற்கு கேள்வி கோரப்படுகிறது.

1. கேள்வி ஆவணங்கள் கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத வைப்பு தொகையினை மக்கள் வங்கி 104 1001 300 74689 (வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி) என்னும் கணக்கு இலக்கத்திற்கு வைப்பு செய்து 03/11/2020 தொடக்கம் 16/11/2020 வரை 09.00am-03.00pm இடையில் வங்கியில் பணம் செலுத்திய பற்று சீட்டினை மேற்கூறிய விலாசத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்.
2. பூரணபடுத்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் மேற்கூறிய விலாசத்திற்கு பதிவு தபாலில் அல்லது நேரடியாக 16/11/2020 03.00pm ற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். அன்றைய தினம் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். (பிந்திய ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்வி செல்லுபடியாகும் காலம் 30 நாட்கள் ஆகும். தெரிவு செய்யப்படும் ஒப்பந்த தாரர்களின் பிணை வைப்பின் செல்லுபடியாகும் காலம் ஒப்பந்தம் கைசாத்திட்ட தினத்தில் இருந்து 60 நாட்களுக்கு ஆகும்.
4. வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி கேள்விகளை ஏற்க நிராகரிக்க மற்றும் இரத்து செய்வதற்கான உரிமையினை கொண்டுள்ளது.
   வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் முடிவே இறுதியானது.
5. மேலதிக தகவல்களுக்கு கீழ் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
   0771363034 0772880421

| Bid ID | Name of category | Quantity | Bid security (refundable) | Nonrefundable Amount |
|---|---|---|---|---|
| NCDB/PROC/EQU/CA/2020/1 | Milk chilling tank with condensing unit 200-225 L | 1 NO | Rs 5,000 | Rs2,000 |
| NCDB/PROC/EQU/CA/2020/2 | Cream separator 50-60 L | 2 NOS | Rs 1,500 | Rs 1,000 |
| NCDB/PROC/EQU/CA/2020/3 | Chest freezer 200-225L | 1 NO | Rs 1,000 | Rs 1,000 |
| NCDB/PROC/EQU/CA/2020/4 | Milk collection cans 40-45L | 10 NOS | Rs 3,000 | Rs1,000 |

தலைவர்,
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
முதியோர் இல்ல வளாகம்,
கண்டி வீதி கைதடி.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
## சுன்னாகம்
### 2021 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2021.01.01ஆம் திகதி தொடக்கம் 2021.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 03.11.2020 – 16.11.2020 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 17.11.2020 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 17.11.2020 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்

| தொ இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை(VAT, NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 36,015.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,050.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் (மின் கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 47,766.00 | |
| 2 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 199,500.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 52,500.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 162,750.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2020.10.12ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

### கிளிநொச்சிக்கும்...

கொரோனா மூன்றாவது அலையில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே இது வரை தொற்றாளர் எவரும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் நேற்றைய தினம் முதலாவது தொற்றாளர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து நாட்டின் 25 மாவட்டங்களிலுமே தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்றுக் கண்டறியப்பட்ட தொற்றாளருக்கு சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்றுக்குத் தேவையான மாதிரிகள் போதாது என்று பெறுபேறு கிடைக்கப் பெற்றிருந்த நிலையில் மீளவும் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நல்லூர், வேலணை மற்றும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் பணியாற்றிய அதே ஹொட்டலில் பணியாற்றிய கிளிநொச்சி நபருக்கே நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் 'உதயன் பத்திரிகையிடம்' உறுதிப்படுத்தினார்.

கொரோனா முதல் அலைத் தாக்கத்தின்போது கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்டவர்களில், வெளிமாவட்டங்களில் பணியாற்றுபவர்கள் விவரங்கள் திரட்டப்பட்டன. தற்போது கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் முதல் அலைத் தாக்கத்தின் போது தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று இல்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், முன்னர் திரட்டப்பட்ட விவரங்களுக்கு அமைவாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்படி நபர் வெளிமாவட்டத்திலிருந்து வீடு திரும்பினால் அறிவிக்குமாறு வீட்டாருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தலுக்கு அமைவாக, கடந்த 25ஆம் திகதி கொழும்பிலிருந்து மேற்படி தொற்றாளர் வீட்டுக்கு வந்ததும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முடிவு தெரியவரவில்லை. இந்த நிலையில் இரண்டாவது தடவையாக பி.சி.ஆர். சோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன. அவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ.5,6.214)

### கிளிநொச்சி தொற்றாளர்...

தில் புறப்பட்டு வவுனியா பேருந்து நிலையத்தை வந்தடைந்துள்ளார். அங்கிருந்து மாலை 4 மணிக்கு வவுனியா - யாழ்ப்பாணம் தனியார் பேருந்தில் புறப்பட்டு பரந்தன் சந்தியை வந்தடைந்துள்ளார். பரந்தன் சந்தியில், முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் அமைந்துள்ள பழக் கடையில் சுமார் 15 நிமிடங்கள் நின்றுள்ளார். அங்கிருந்து 6.15 மணிக்கு முல்லைத்தீவு தனியார் பேருந்தில் ஏறி தருமபுரத்தில் இறங்கியுள்ளார்.

அவருடன் பேருந்தில் பயணித்தவர்கள் தொடர்பான விவரங்களை சுகாதார அதிகாரிகள் திரட்ட ஆரம்பித்துள்ளனர். (ஒ.5,6)

### கொரோனா 22...

இறப்புக் கணக்கில் சேர்க்க முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவுப் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீரவை மேற்கோள்காட்டி அரச தகவல் திணைக்களம் இந்தத் தகவலை நேற்று மாலை அறிவித்துள்ளது.

உயிர்மாய்ப்பு முயற்சி என கடந்த 31ஆம் திகதி பாணந்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அந்தப் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞர் உயிரிழந்தார். அதனையடுத்து அவரது சடலம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியிருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து கொரோனா வைரஸால் இலங்கையில் இறந்தவர்களின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்தது என்று நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-22)

### சகல மாவட்டங்களிலும்..

என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம். எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கச் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்ததாவது:

அதிகளவு தொற்றாளர்கள் இனங்காணப்படக்கூடிய பகுதியாக மேல்மாகாணம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனாலேயே அது முடக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஆபத்து நிலைதான் உள்ளது. மினுவாங்கொட, பேலியகொட கொத்தணிகள் இன்னும் ஆபத்தான நிலையிலேயே உள்ளன. அவற்றுக்குச் சமாந்தரமான பிறிதொரு கொத்தணி உருவாகக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

கொரோனாத் தொற்றாளர்கள் பெருமளவானோர் சமூகத்திலிருந்தே இனங்காணப்படுகின்றனர், தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து அல்ல. எனவே, துரித செயற்பாடுகளை முன்னெடுத்தால் மாத்திரமே இவ்வாறான நிலைமையைச் சீராக்கலாம், எதிர்காலத்தைச் சிறந்ததாக்கலாம் என்றார். (த.மஇ)

### வடக்கில்...

வரை 60 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மார்ச் தொடக்கம் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 18 நோயாளர்களும் ஒக்ரோபர் மாதத்தில் 49 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். நேற்று கிளிநொச்சியில் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு நாள்களில் வடக்கில் புதிதாக எவரும் சமூகத் தொற்றுக்கு உள்ளாகவில்லை. இருந்தாலும் கடந்த வாரத்தில் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தி அவர்களுக்கான பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த 19ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்த மருதங்கேணி கொரோனா சிகிச்சை நிலையத்தில், 50 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்திருந்தார்கள். இவர்களில் முதலாவது தொகுதியாக 16 பேர் இரண்டு வாரங்கள் சிகிச்சையை நிறைவுசெய்து அவரவர்களின் வீடுகளுக்கு நேற்று அனுப்பப்பட்டனர்.

இலங்கை முழுவதும் கொரோனா மிகத்தீவிரமாக பரவி வருகின்ற இந்த வைரஸ் மிகவும் வீரியம் மிக்கது. அதன் நோயின் தாக்கமும் அதிகமாக காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் இந்த தொற்று பரவலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இயலுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (த.மஇ)

### ஊருக்கு...

என்று சுமார் 60 பேருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த வாரம் யாழ்ப்பாண மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் முகமாக பல்வேறு அறிவிப்புகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் விடுத்திருந்தார். குறிப்பாக ஒன்றுகூடல்கள், கூட்டங்களை நிறுத்துமாறு அறிவுறுத்தியிருந்தார். தனது அறிவிப்புக்கு முரணாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அரச அதிகாரிகள் 60 பேரை இன்றைய தினம் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். அமைச்சர்கள் குழாம் எதிர்வரும் 6ஆம் திகதி வரவுள்ளமை தொடர்பான முன்னாய்த்தக் கூட்டத்துக்கே மாவட்டச் செயலர் அழைப்புவிடுத்துள்ளார். (ஓ,5)

### பாடசாலை...

ரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது எனினும், பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார அமைச்சின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே விடுமுறை இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்தது. இறுதித் தீர்மானம் நவம்பர் மூன்றாவது வாரத்தில் எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மாணவர்களின் சுகாதார பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே முடிவு அமையும். தேவை ஏற்படின் 'ஒன்லைன்' ஊடாக மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பது தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (கு)

### பொதுவெளியில்....

பேணுதல் ஆகிய மூன்று விடயங்களையும் தவறாது பின்பற்றுங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ஸ் விசேட அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அவர் நேற்று விடுத்த விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விசேடமாக வடக்கு மாகாணத்தினுள் கடற்பரப்பின் ஊடாக அத்துமீறி நுழைபவர்களைத் தடுப்பதற்காக கடற்படையினர் விசேட ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தகைய கடலோரப் பாதுகாப்பையும் கடந்து யாராவது அத்துமீறி உள்நுழைவார்களாயின் அல்லது உள் நுழைந்து மறைந்திருப்பார்களாயின் கரையோர வாழ் வடபிராந்திய மக்கள் உட்பட எவராயிருந்தாலும் அருகில் உள்ள பொதுச்சுகாதார அதிகாரிகளிடத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குங்கள்.

வெளிமாவட்டங்களிலிருந்து அண்மைய நாள்களில் வடக்குக்கு வருகை வந்துள்ளவர்கள் உங்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலில் இருங்கள். உங்கள் உடல்நிலையில் மாறுபட்ட அடையாளங்கள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்யுங்கள். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பீ.சி.ஆர். பரிசோதனைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே பொதுமக்கள் இயல்பான சந்தேகங்கள் ஏற்படுமிடத்து எவ்விதமான அச்சமும் அடையாது பரிசோதனைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும்.

சமூகப் பொறுப்புடன் வடக்கு வாழ் ஒவ்வொரு பிரஜைகளும் நடந்து கொள்ளுங்கள். மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் விசேட கவனம் கொண்டிருப்பதும் அவசியமாகின்றது. அதற்குரிய அறிவுத்தல்களையும் நான் வழங்கியுள்ளேன். மங்கல, அமங்கல நிகழ்வுகளின்போது வரையறுக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம். என்றுள்ளது. (கு)

### யாழ்ப்பாணம் வரும்...

நாள்கள் சுயதனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ள நிலையில், எதிர்வரும் 6ஆம் திகதி வருகை தரும் அமைச்சர்கள் குழாத்தினரும் தனிமைப்படுத்தப்படுவார்களா என்று அரச அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அமைச்சர்கள், செயலர்கள் மற்றும் பணியாட் குழுவினர் என்று சுமார் 100 பேர் யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 6ஆம் திகதி வருகை தரவுள்ளனர்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் அமைச்சர்களான நீர்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ச, மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான 100 பேர் கொண்ட குழுவினரே வருகை தரவுள்ளனர். மேல் மாகாணத்திலிருந்து வருபவர்கள் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்த வேண்டும் என்று ஆளுநர் அறிவித்திருந்தார். அதற்கு அமைவாக கொழும்பிலிருந்து வருகை தரும் அமைச்சர்கள் குழாமும் தனிமைப்படுத்தப்படுவார்களா என்று அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவினர் கடந்த 29ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு திட்டமிட்டிருந்தனர். கொரோனா சூழலையடுத்து அவர்கள் தமது பயணத்தை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். தற்போது 10ஆம் திகதிய பயணத்தையும் அவர்கள் இரத்துச் செய்துள்ளனர். ஆனாலும், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவினர் திட்டமிட்டவாறு எதிர்வரும் 6ஆம் திகதி தமது பயணம் அமையும் என்று நேற்று அறிவித்துள்ளனர். (ஒ.5)

# டெல்லியிடம் வீழ்ந்தது பெங்களூர்

## இரு அணிகளும் அடுத்த சுற்றுக்குள்ளும் நுழைந்தன



அபுதாபி, நவ. 3
ஐ.பி.எல் தொடரின் அடுத்த சுற்றுக்கான தீர்மான மிகு போட்டியில் பெங்களூர் அணி டெல்லி அணியிடம் 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்ந்தது. எனினும் இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கும் முன்னேறின.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி படிக்கல்லின் அரைச்சதம் கைகொடுக்க இருபது பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக படிக்கல்(50), வில்லியர்ஸ்(35), கோலி(29) ஓட்டங்களைக் குவித்தனர். பந்துவீச்சில் நோறிஜே 3 இலக்குகளையும் றபாடா 2 இலக்குகளையும் அஸ்வின் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

153 என்ற எட்டக்கூடிய இலக்கை நோக்கி களமிறங்கிய டெல்லி அணிக்கு ரகானே மற்றும் தவான் ஆகியோரின் அரைச்சதங்கள் கைகொடுக்க 19 ஓவர்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அதிகபட்சமாக ரகானே(60), தவான்(54) ஓட்டங்களைப் பெற்றதோடு ஏனையவர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் அஹமட் 2 இலக்குளையும் சுந்தர்,சிராஜ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக நோறிஜே தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வெற்றியின் மூலம் அடுத்த சுற்றான பிளே ஒவ் சுற்றுக்குள் டெல்லி அணி தெரிவு செய்யப்பட்டதுடன் நிகர ஓட்ட சராசரியின் மூலம் பெங்களூர் அணியும் தெரிவு செய்யப்பட்டது. இன்றைய தினம் லீக் ஆட்டத்தின் இறுதிப் போட்டியாக மும்பை மற்றும் ஹைதராபாத் அணிகள் சார்ஜா மைதானத்தில் மோதுகின்றன. (ரி4)



# மீண்டும் ரொனால்டோ



லிஸ்பன், நவ.3
கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மீண்டு வந்துள்ள உலகின் முன்னணி கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரெனால்டோ மீண்டும் போட்டிகளில்கலந்துகொள்ள ஆரம்பித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஸ்பெசியா அணியுடனான கழகப் போட்டியில் யுவன்டஸ் அணிக்காக களமிறங்கி வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந்த ஆட்டத்தில் யுவன்டஸ் அணி 41 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. அணி சார்பில் ரொனால்டோ இரண்டாவது மற்றும் மூன்றாவது கோல்களை அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். (ற)

## கண்ணீர் அஞ்சலி



**வேணுகோபால் ஆச்சாரி ருக்மணி**

எமது நண்பர்களான காலஞ்சென்றவர்களான பரமானந்தன் ஆச்சாரி இராமன் ஆச்சாரி ஆகியோரின் அன்புத் தாயார் வேணுகோபால் ஆச்சாரி ருக்மணி அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

## தேவை

சிறியகுடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.
(வலிகாமம் தென்மராட்சி விரும்பத்தக்கது)
070 192 4435

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு கரந்தன் குறுக்கு றோட் நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி ஊரெழு ஆனந்தகானம் பகுதியில் உள்ளது. பிரித்து கொடுக்கப் படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு:
076 6400 974, 077 8949 549

## வேலையாட்கள் தேவை

புதிய கண்டுபிடிப்புக்களை வளர்த்தெடுத்தலையும். சமூக மேம்பாட்டையும் நோக்காக கொண்ட "Centre for creativity and Innovation" நிறுவனத்திற்கு சமூக வலைத்தள முகாமைத்துவம் (Social media maintenance and promotion) மற்றும் இணைய முகாமைத்துவம் செய்வதற்கு தகுதியான நபர்களிடமிருந்து ( Female only ) விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம். யாழ் நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.
Centre for Creativity & Innovation.
68, iluppayadi Junction Jaffna.
விண்ணப்பங்கள் email முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Email -ccimanagement100@gmail.com
Telephone -021 3151 14[illegible] Mobile - 757417332

## வேலையாட்கள் தேவை

சிறி பேப்பர் மார்ட் என்னும் வியாபார ஸ்தலத்துக்கு பெண் ஊழியர்கள் தேவை.
நேரில் வரவும் - 04.11.2020 புதன்கிழமை
10.00 am தொடக்கம் 12.00 pm மணி வரை
NO.12, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்
077 797 0025

# PHYSICS ZOOM CLASS

S.SOTHILINGAM
B.Sc (Spl), PGD in Edu

2021 A/L - CURRENT ELECTRICITY (UNIT-08)
ஆரம்பம் 04/11/2020 (9.30 AM-11.00 AM)

2022 A/L - ROTATIONAL MOTION & CIRCULAR MOTION
ஆரம்பம் 04/11/2020 (8.00 AM-9.30 AM)

DAY BATCH
ஆரம்பம் 04/11/2020 (2.30 PM-4.30 PM)

நேரடி வகுப்புக்கள் தொடங்கினும் ZOOM CLASS தொடர்ந்து நடைபெறும்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் யாரும் இணைந்து கொள்ளலாம்.

Normal Call
077 286 4517



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.